மலர்-5 இதழ்-124 அக்டோபர் 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

மாதமிருமுறை




2021 குருபெயர்ச்சி பலன்கள்

## மாரியம்மனால் பாதுகாக்கப்படும் ரேணுகாதேவி சிரசு

## தர்ப்பணம் செய்யும்போது கடைபிடிக்கவேண்டியது?

ஒவ்வொருவது கைகளிலும் தீர்த்த தேவதைகள் குடி கொண்டு உள்ளார்கள். கட்டைவிரல் அடிப்பகுதி மற்றும் ஆள்காட்டி விரலின் அடிப்பகுதியின் இடையே அடிப்பகுதியில் பித்தரு தீர்த்தம் உள்ளது. கட்டை விரலின் அடிப்பகுதியில் பிரும்ம தீர்த்தம் இருக்க, சுண்டி விரலின் அடியில் ரிஷி தீர்த்தம் இருக்க, அக்னி தீர்த்தம் உள்ளங்கையில் உள்ளன.




ஆகவே தர்ப்பணம் செய்யும் போது அந்தந்த விரல்களின் மூலமே நீர் ஊற்ற வேண்டும்.

## குளிப்பதன் அவசியம்

காலையில் எழுந்து குளிக்க வேண்டும். காலையில் குளிப்பதின் மூலம் வாழ்வு வளம் பெறும், அறிவு விருத்தியாகும், உடல் பலம் பெறும், துயரங்கள் விலகும், கெட்ட கனவுகள் வராது. பிரும்மச்சாரிகள் கண்டிப்பாகஒரு வேளையாவது குளிக்க வேண்டும். கிரஹஸ்தர்கள் காலை மற்றும் மதியம் நிச்சயம் குளிக்க வேண்டும். தபஸ்வி மற்றும் சன்யாசிகள்மூன்று வேளைக் குளிக்க வேண்டும். நல்லஉடல் நிலையில் உள்ளவர்கள் சுத்தமான குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும். அதுவே சிறந்தது.




அதுபோலவேதான் கிரஹஸ்தர்களும் உடல் நலம் அற்றவர்களும் வென்னீரில் குளிக்கலாம். ஆனால் அவர்களும் கிரகண தினங்கள் மற்றும் சிரார்த்த தினங்களில் வென்னீரில் குளிக்கலாகாது.

## கடன் பிரச்சனை தீர்க்கும் கந்த சஷ்டி கவசம்

கொடிய கடன் தொல்லைகள் தீர செவ்வாய் கிழமை அன்று முருகன் சன்னதியில் அமர்ந்த நிலையில் 36 முறை கந்த சஷ்டி கவசம் ஜெபம் செய்து வர வேண்டும். அல்லது வீட்டில் முருக கடவுள் போட்டோ முன்பாக 36 ஜெபம் செய்யலாம்.அல்லது செவ்வாய் கிழமை அன்று 12 முறையும், புதன் கிழமை அன்று 12 முறையும், வியாழக்கிழமை அன்று 12 முறையும் ஜெபம் செய்து வர வேண்டும். அல்லது வாரம் அல்லது மாதம் ஒரு செவ்வாய் கிழமை அன்று அண்ணாமலை கிரிவலம் செல்ல வேண்டும். முருக கடவுளின் எந்த திருக்கோலத்தை தரிசித்தாலும் கடன் தொல்லைகள், பில்லி, சூனியம், ஏவல், திருஷ்டி, திருமண தடை விலகி நன்மை பெறலாம்.




## ஆன்மிக மலர்கள்

- வெள்ளிக்கிழமை காலை 10.30–12.00 இராகு காலத்தில் துர்க்கைக்கு தாமரை தண்டு திரி போட்டு நெய்விளக்கு ஏற்றி வழிபட, தெய்வ குற்றம், குடும்ப சாபம் நீங்கும்.
- ஹஸ்த நட்சத்திரத்தன்று துர்க்கைக்கு சிகப்பு பட்டு துணி சாற்றி, சிகப்பு தாமரையை பாதத்தில் வைத்து 27 எண்ணிக்கை கொண்ட எலுமிச்சை பழ மாலை சாற்றி, குங்கும அர்ச்சனை செய்து, அந்த குங்குமத்தை நெற்றியில் வைத்து வர உடனே திருமணம் நடைபெறும். www.aanmeegamalar.com
- ருத்ராட்சம், சாளக்கிராமம், துளசி, வில்வம் உள்ள இடத்தில் செய்வினை அணுகாது.
- பஞ்சகவ்ய கலவையை வாரம் ஒரு முறை வீடுகளில் தெளிக்க, தோஷம், தீட்டு நீங்கி, லஷ்மி கடாக்ஷசம் கிடைக்கும்.
- செவ்வாய்க்கு அதிபதியான முருகப் பெருமானுக்கு செவ்வாய் தோறும் நெய் விளக்கு ஏற்றி வழிபடமூன்று வேலை கிடைக்கும்.




www.aanmeegamalar.com

# தேன் அபிஷேகம் செய்தால் தித்திக்கும் வாழ்வு தரும்

## ஆரணிப்பாளையம் ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம்

அகிலம் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கி, அகிலத்தில் வாழும் உயிர்களுக்கு அபயம் அளித்திடும் அரனார், அன்பர்களின் ஆத்மாவிற்கு ஏற்ப தனது ரூபங்களை மாற்றி, அருள் புரிகின்றார். அவ்வாறு ஈசன், இவ்வுலகின் மிக உன்னதத் திருத்தலமாகப் போற்றப்படும் வாரணாசி என்னும் காசி க்ஷேத்திரத்தில், கங்கை நதிக்கரையில் விஸ்வநாதராகப் போற்றித் துதிக்கப்படுகின்றார்.

இந்த விஸ்வநாத மூர்த்தியானவர், அகில மெங்கும் பற்பல தலங்களில் வீற்றெழுந்து அருள்பாலித்தருளுகின்றார்.

அந்த வகையில் ஆதியில் தர்மாரண்ய க்ஷேத்திரமாகத் திகழ்ந்த ஆரணி மாநகரில் ஆரணிப்பாளையம் பகுதியில் அன்னை ஸ்ரீ விசாலாக்ஷி அம்பாளுடன் எழுந்தருளினார் ஸ்ரீ காசி விஸ்வநாதர்.

இந்த ஆரணியில் ஓடும் நதி கமண்டலநாக நதியாகும். இந்த நதி ஜமதக்னி மாமுனிவரின் கமண்டலத்திலிருந்து பெருக்கெடுத்த நதி என்பதால் கங்கையை விடவும் பன்மடங்கு புண்ணியம் மிகுந்ததாகும். இதனால் இந்நதி "கமண்டல கங்கா" என்றே போற்றப்படுகின்றது.

இந்நதியின் வடகரையில் பழங்காமநல்லூர் என்னும் பழங்காமூரில் காசியைப் போன்றே ஸ்ரீ விஸ்வநாதர் கோவில் கொண்டுள்ளார். அது





www.aanmeegamalar.com

போல் தென்கரையில் இங்கு ஆரணிப்பாளையம் பகுதியில் ஸ்ரீ காசி விஸ்வநாதர் அருள் புரிகின்றார். சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்புகிருஷ்ண தேவராயர் காலத்தில் காசியிலிருந்து கொண்டு வந்த பாண லிங்கத்தை இங்கு கமண்டல கங்கையின் தென்கரையில் ஆரணிப்பாளையம் என்னும் இப்பகுதியில் ஸ்தாபித்து, குடமுழுக்கு நடத்தியுள்ளனர்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஐந்து சிவால யங்கள் இங்கு [ஆரணியில்] சிறப்புடன் திகழ்ந் துள்ளது.

அவை......

1. புதுக்காமூர் பகுதியில் ஸ்ரீ புத்திரகாமேட்டீஸ் வரர் ஆலயம்,
2. ஆ ர ணி ள் பா ளை ய த் தி ல் (இங்கு) ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம்,
3. ஆரணிக் கோட்டையில் ஸ்ரீ கயிலாசநாதர் ஆலயம்,
4. கொசப்பாளையம் பகுதியில் ஸ்ரீ வேதபுரீஸ்வரர் ஆலயம்,
5. அருணகிரிசத்திரத்தில் ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஆலயம.

பின்னர் வந்த சத்திய விஜயநகர ஜாகீர் தாரர்கள் இவ்வாலயத்தைப் புனரமைப்பு செய்து, நித்தியநைமித் திய பூஜைகளை சிறப்புற நடத்தி யுள்ளனர். அதோடு, இந்த கோவிலுக்கு பல ஏக்கர் நிலங் களை ஒதுக்கியுள்ளனர் அக்கால அரசர்கள்.



மோ.கணேஷ்

காலப்போக்கில் இவ்வாலயம் சிதிலமடைந்து, கவனிப்பாரற்று போனது.

அப்போது இங்கிருந்த விஸ்வநாதர் விசா லாக்ஷி மற்றும் பரிவார தெய்வச் சிலைகள் இதே பகுதியில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநா யகர் ஆல யத்தில் பாதுகாப்புடன் வைத்து, பூஜிக் கப்பட்டு வந்தது.

பின்னர், கடந்த 2017–ஆம் ஆண்டு சிவாலயம் புனரமைக்கப்பட்டு, விஸ்வநாதர்பரிவாரங்களு டன் ஸ்தாபிதம் செய்யப்பட்டு, அறநிலையத் துறை உதவியுடன் கும்பாபிஷேகம் நடத்தினர் சிவபக்தர்கள்.

பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகளும்வாசம் செய்யும் அரச மரத்தின் கீழ் ஆலயம் கொண் டுள்ளார் விஸ்வநாதப்பெருமான்.

முகப்பு வாயிலுடன் தனி விமா னம் கொண்டு திகழ்கிறது ஆலயம்.

கிழக்கு நோக்கிய சிவன் சன் னதி. முகப்பில் தகரக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

சில படிகள் ஏறி, உள்ளேசெல்ல, அர்த்த மண்டபத்தில் ஸ்ரீ நந்தியம்

பெருமான் வீற்றுள்ளார். முன்னே பலிபீடம் உள் ளது.




இங்கே தென்புறம் கணபதியும், வடபுறம் வள்ளி தெய்வானை உட னுறை ஸ்ரீ சண்முகரும் அருள் செய்கின்றனர்.

கருவறையுள்கருணா மூர்த்தியாக, ஒளி மயமாக திருவருள் பொழிகின்றார் ஸ்ரீ காசி விஸ்வநாதர். சிறிய மூர்த்தம். மூர்த்தி சிறிதானா லும் கீர்த்தி பெரிதல்லவா?

பின், ஆலய வலம் வருகையில் ஆலயத்தின் பின்னே ஸ்ரீ மகாவிஷ்ணுவும், அவருக்கு நேர் எதிரே தலவிருட்சமான அரச மரமும் ஓங்கி நிற்கிறது. அரச மரத்துடன் சேர்த்து வலம்வரும்படியாக ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

சிவன் சந்நிதிக்கு இடதுபுறம் வாம பாகத்தில் சிறிய சந்நிதியுள் நின்றவண்ணம் எழில் சிந்து கின்றாள் அன்னை ஸ்ரீ விசாலாக்ஷி.

பின், ஈசான திசையில் தென்முகம் பார்த்த படி அருளுகின்றார் ஸ்ரீகாலபைரவர். ஒரே திருச்சுற்றுடன் ஆலயம் திகழ்கிறது. சிறிய ஆலயமெனினும் சீருடன் உள்ளது.

காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட இவ்வகை லிங்கங்களில் இருந்து பௌர்ணமி மற்றும் பிரதோஷ காலங்களில் நுண்ணிய ஆற்றல் வெளிப்படும். அப்போது வழிபடும் பக்தர்களுக்கு இவ்வாற்றலானது உடல் மற்றும் மன ரீதியாக பல சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

தினமும் இவ்வால யத்தில் சிவாச்சார்யார் மூலமாக நித்திய பூஜைகள் நியமத்துடன் செய் யப்படுகின்றன.

இங்கு ஸ்வாமிக்கும் அம்பாளுக்கும் தேன் அபிஷேகம் செய்து வழிபட, வாழ்வும் தேன் போல தித்திக்கும். திங்கட்கிழமைகளில் பசும்பாலால் அபிஷேகம் செய்து, வில்வ அர்ச்சனை செய்து வழிபட, நல்ல பதவியும், பவித்திரமான வாழ்வும் அடையலாம் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரில் ஆரணிப்பாளையம் பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம்.

ஆலய தொடர்புக்கு: கி.இராஜாமணி குருக்கள் போன்: 9486424895\8903885566

– ஜோதிட கலாநிதி பழங்காமூர்
மோ.கணேஷ் குருக்கள், ஆரணி.
தொடர்புக்கு: 9789156179.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# மகிமை வாய்ந்த சோமவார விரதம்

சித்திரவர்மா என்ற மன்னன் ஆட்சியில்இருந் தான். அவன் மிகவும் நேர்மையானவன், கண்டிப் பானவன். அவனுக்கு அனைத்து செல்வங்களும் இருந்தும் மழலை செல்வம் மட்டும் இல்லாமல் இருந்தார்.

ஆகவே, அவர் ராஜகுருவின் ஆலோசனைப்படி சிவபெருமானை துதித்து விரதம் இருக்க அவனுக்கு அழகான, அறிவுள்ள மகாலஷ்மியைப் போன்ற ஒரு பெண் குழந்தைப் பிறந்தது.

அக்குழந்தைக்கு சிமந்தினி எனப் பெயரிட் டார்கள். அவள் ஜாதகத்தைக் கணித்த பண்டிதர்கள் ''உங்களுடைய மகள் அனைத்து புகழும் பெருமையையும் கொண்டவளாக கல்வி அறிவு மிக்கவளாக இருப்பாள். அனைவரையும் மதித்து நற்குணங்களைக் கொண்டவளாக இருப்பாள். ஆனால் அவளுக்கு ஒரு கண்டம் உள்ளது. அதன்படி அவள் தனது பருவ வயதில் விதவை ஆகி விடுவாள்'' என்றனர்.

ஜோதிடர்களின் கணிப்பால் மன்னனுக்கு மிகப்பெரிய வருத்தம் சூழ்ந்து கொண்டது. தனது மகளுடைய எதிர்காலத்தைக் குறித்துக் கவலை அடைந்தார்.

ஆனால் அவருடைய மகளான சிமந் தினியோ தனது வரும் காலத்தைக் குறித்து கொஞ்சம் கூடக் கவலைப்படவில்லை. நடப்பது அனைத்துமே ஈசனின் செயலே என அனைத்தையும் அமைதியாகவே ஏற்றுக்கொண்டு எந்த விதமான சலனத்தையும் காட்டாமல் வாழ்ந்து வந்தாள்.

அந்த நிலையில் ஒருமுறை யாக்யவல்யக முனிவருடைய மனைவியான மைத்ரேயி என்பவள் மன்னனின் அழைப்பை ஏற்று அரண் மனைக்கு வந்திருந்தாள்.

அவள் நதியில் குளித்து விட்டு வந்தபோது அவளை சந்தித்த சிமந்தினி 'பதி விரதைகளாக வாழ்ந்து வந்த சௌபாக்கியவதிகள் எப்படி நீண்ட ஆயு ளுடன் வாழ்ந்தார்கள். தனக்கு ஆயுள் பதினான்கு வருடங்களே என்று ஜோதிடர் கூறியதினால் தான் அதை மாற்ற என்னசெய்ய லாம்' என்று அவளிடம் ஆலோசனைக் கேட்டாள்.

மைத்ரேயி அவளுக்குக் 'பதிவிரதைகள் தவறாமல் சிவபெருமானை வேண்டிக் கொண்டு சோமவார விரதத்தை அனுஷ்டித்தால்தான் சுமங்கலிகளாக வாழ முடிந்தது. அதுபோலவே எந்த ஒரு பெண்ணுமே தனக்கு உண்மையி லேயே வரவுள்ள கஷ்டத்தை தீர்க்க சோம வார விரதத்தை தூய்மையாக இருந்தபடி அனுஷ்டித் தால் அவர்கள் வேண்டியது கிடைக்கும்.

காலை முதல் இரவு வரை பட்டினி கிடந்து சிவபூஜை செய்து சிவனை ஆராதிக்க வேண்டும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் வாழ்க்கையில் எந்த கஷ்டமும் இருக்காது. சிவ பார்வதியை வணங்கினால் எல்லா நற்பயன் களையும் அவர்கள் தருவார்கள்' என்று கூறி னாள். அதைக் கேட்ட சிமந்தினி தானும் சோம வார விரதம் அனுஷ்டிக்கத் துவங்கினாள். அவள் செய்து வந்த பூஜையிலும் விரதத்திலும் எந்த குறையும் வைக் காமல் அதை செய்து வந்தாள்.

சில காலம் கடந்தது. வயதுக்கு வந்துவிட்டசிமந்தினிக்கு ஆசாரப்படி திருமணம் செய்ய வேண்டிய அவசியம் வந்ததும் தமது ஆலோசகர் களுடன் அனைத்தையும் விவாதித்து ஆலோ சனை செய்த மன்னன் நடப்பது நடக்கட்டும் என்று அவளுக்கு திருமணமும் செய்து வைத்தார்.

இந்திரசேனன் என்ற மன்னனின் மகனான சந் திராங்கவர்மா என்பவனுக்கு அவளை மணமுடித்தார்கள். சீமந்தினியின் கணவர் நற்குணங்களைக் கொண்டவர்.



அரசகுமாரன் என்றாலும் அகம்பாவம் இல்லாமல் அவருடைய குணத்திலும் எந்தவிதமான குறையையும் காண முடியாது எனும் அளவில் வாழ்ந்து வந் திருந்தார். திருமணம் முடிந்து சில வருடங்கள் அவர்கள் இனிமையான வாழ்கையை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் ஒரு பண்டிகையில் யமுனை நதியில் நண்பர்களுடன் படகில் பயணம் செய்து கொண்டு இருந்த சந்திராங்கவர்மா நதியின் சுழலில் சிக்கி படகு கவிழ்ந்து நதியில் மூழ்கி னார். அவருடைய நண்பர்கள் சிலர் மட்டும் எப்படியோ தப்பி வந்தார்கள். மற்ற சிலர் சந்திராங்கவர்மாவுடன் நதியில் மூழ்கினார்கள்.

தப்பிய நண்பர்கள் எங்கு தேடியும் சந்திராங்க வர்மாவின் உடல் கிடைக்கவில்லை என்பதினால் அரண் மனைக்குச் சென்று மன்னனிடம் அதைக் கூறினார்கள்.

அந்த செய்தியைக் கேள்விப்பட்ட மன்னன் பெரும்துய ரத்தில் வீழ்ந்தார். ஆனாலும் சிமந்தினியோ தன்னுடைய கணவர் மரணம் அடையவில்லை, அவர் எங்கேயோ உயிருடன் இருக்கிறார், நல்லபடி திரும்பி வருவார் என்று தாம் நம்புவதாக கூறி நம்பிக்கையோடு சிவபெருமானை துதித்தபடி விரதத்தை தொடர்ந்து செய்து கொண்டு இருந்தாள்.

ஆகவே இன்னும் சில நாட்கள் பொறுத்துப் பார்த்தப் பின் என்ன செய்யலாம் என முடிவு செய்யலாம் என தீர் மானித்தவர்கள் சிமந்தினியை விதவையாகக் கருதாமல் சந்திராங்கவர்மா எப்போது கிடைப்பார் என்று அவரை அனைத்து இடங்களிலும் தேடியபடி காத்திருந்தார்கள்.

நதியில் சுழலில் அகப்பட்டு மூழ்கிய படகில் இருந்து நதிக்குள் விழுந்து முழுகிய சந்திராங்க வர்மா அதிருஷ்ட வசமாக உயிர் தப்பினார்.

அவர் படகு கவிழ்ந்த நேரத்தில் அந்த நதியில் அதே இடத்தில் விளையாடிக் கொண்டு இருந்த நாக கன்னி கைகள் அவர்களது அழகில் மயங்கி அவர்களைக் காப்பாற்றி பாதாளத்தில் இருந்த தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

தம்முன் நின்றிருந்த சந்திராங்கவர்மா மற்றும் அவரது நண்பர்களை நீங்கள் யார் என்று தக்ஷகன் கேட்க, அவர்கள் தம் கதையைக் கூறினார்கள்.




அதற்கு தஷகன் 'நீங்கள் எந்தக் கடவுளை வணங்குபவர்கள்' என்று கேட்டதும் அவர்கள் தாம் சிவபெருமானை வணங்குபவர்கள் என்று கூற, அதைக் கேட்ட நாகலோக மன்னன் பெரும் மகிழ்ச்சி அடைந்தான்.

காரணம் அவனும் சிவபக்தனே. ஆகவே அவர்களை சிலகாலம் அங்கிருக்குமாருகூறி னார். அதன் பின் ஒரு நாள் தனது படையினரை அழைத்து மறுநாள் காலை நல்ல படியாக அவர்களை அழைத்துச் சென்று நதிக்கரையில்விட்டு விட்டு வருமாறு ஒரு அற்புதமான குதிரை யில் ஏற்றி அனுப்பினார்.

அதோடு, எப்போது வேண்டுமா னாலும் அவர் தம்மை அழைத்தால் உடனே தன் படையுடன் வந்து அவ ருக்கு உதவுவதாக வாக்குறுதி

# ஆன்மிக மலர்கள்

- சிவன் கோவில் ரீஸ் வன்னி மரம், வில்வ மரத்தை 21 முறை ஓம் ரீங் சிவ சிவ என்று ஜெபம் செய்து, வலம் வந்து நமது குறை களைக் கூற, நல்ல பலன் கிடைக்கும். தீர்ப்பு கள் சாதகம் ஆகும். இம்மரங்களுக்கு நாம் கூறுவதை கேட்கும் சக்தி உள்ளதாக ஒரு ஐதீகம் உண்டு.
- இரண்டு சர்ப்பங்கள் இணைந்தது போல் இருக்கும் நாகராஜா சிலைக்கு, வெள் ளிக்கிழமை காலை [10.30–12.00] இராகு காலத்தில், மஞ்சள் குங்குமம் வைத்து, செவ்வரளிப் பூ சாற்றி, அபிஷேகம் செய்து, நெய்தீபம் ஏற்றி ,தம்பதிகள் பெய ருக்கு அர்ச்சனை செய்தால்தம்பதிகள் ஒற்றுமையாக, அன்னியோன்யமாக வாழ் வார்கள்.
- குடும்பத்தில் தாங்க முடியாத கஷ்டங்கள் வந்தால், மன அமைதி குறைந்தால் , அருகில் உள்ள ஆலயங்களில் தீபம் ஏற்றி வழிபடுவது ரிஷிகள் சொல்லிய பரிகாரம்.

கொடுத்தார்.

அதில் ஏறிக் கொண்டு தான் எந்த இடத்தில் மூழ்கினோனோ அதே இடத்தில் சென்றான் சந்திராங்கவர்மா.

அதே வேளையில் சீமன்தினி அந்த நதிக் கரையில் ஒதுக்குப்புறமாக இருந்த இடத்தில் மறைவாக இருந்தவண்ணம் சோம வார விரதத்தை செய்தபடி இருந்ததைக் கண்டார்.

தூரத்தில் இருந்தே அவளைப் பார்த்து விட்டு தனது முகத்தை மூடிக் கொண்டு அவள் அருகில் சென்றபோது அவளது பரிவாரங்கள் அவளை பார்க்க முடியாதபடி அவரை மறித்துக் கொண்டு நின்றபடி 'நீங்கள் யார்? கந்தர்வ புருஷரா? இங்கே எப்படி வந்தீர்கள்?' என்று வினவ, சந்திராங்கவர்மாவும் அங்கு ஏதோ விபரீதம் நடந்துள்ளது என்பதை புரிந்து கொண்டு, ஏன் இப்படி மறைவாக வாழ்ந்து பூஜை செய்கிறீர்கள் என்று கேட்டான்.

சந்திராங்கவர்மா முகத்தை மூடிக் கொண்டு இருந்ததால் வந்துள்ளவர் யார் என்பதை தெரிந்து கொள்ளாமல் சிமந்தினியின் கதையைக் கூறி, அவளுடைய கணவர் நீரில் மூழ்கிய கதையையும் கூறினார்கள்.

இறந்தவரின் உடல் கிடைக்காத வரை அவர் இறந்து இருக்க முடியாது என சீமன்தினி நம்புவதினால் சிவபெருமானை வேண்டிக் கொண்டு அவர் நலமாக திரும்பி வருவதற்கு சோமவார விரதம் அனுஷ்டிக்கிறார் என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள் தொடர்ந்து கூறுகையில் அவர்களின் நாட்டை அந்நிய நாட்டு மன்னன் அபகரித்துக் கொண்டு அந்த நாட்டின் மன்னனான இந்திரசேனனையும் அவர் மனைவி யையும் சிறையில் வைத்துள்ளதால்



கீதா-ராஜன்

இவள் மறைந்திருந்து வாழ்ந்து வருகிறாள் என்றும் கூறினார்கள்.

அதைக் கேட்ட சந்திராங்கவர்மா, இந்திரசேன னையும் அவர் மனைவியையும் உடனே விடுதலை செய்யாவிடில் அந்நிய நாட்டு மன்னனையும், அவர் நாட்டையும் நாசமாக்கி விடுவேன் என நாகலோக படை மூலம் செய்தி அனுப்பினான்.

அந்த நாட்டு மன்னனும் நாகலோகப் படையி னரைக் கண்டு பயந்து ஓடினான். சிறையிலிருந்த இந்திரசேனனும் அவர் மனைவியும் சிறையில் இருந்து விடுதலை ஆகி வந்து மீண்டும் நாட்டின் அரசனானதும் சந்திராங்கவர்மா தான் யார் என்பதை பகிரங்கப்படுத்த அனைவரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அதன் பின் சந்திராங்கவர்மா நடந்த அனைத் தையும் விவரமாக அனைவருக்கும் கூறிய பின் தன்னுடன் வந்திருந்த நாகர்களுக்கு நன்றி கூறி அவர்களை நல்ல முறையில் கௌரவித்து நாகலோகத்துக்கே திருப்பி அனுப்பினான்.

சீமாந்தினி செய்த சோமாவர பூஜையால் மிகப்பெரிய கண்டத்திலிருந்து அந்த நாடும், அரசனும், தனது வாழ்கையும் தப்பியது,மேலும் சோம வார விரதம் இருந்த சிமந்தினி சிவபெரு மானின் அருளைப் பெற்று இழந்த கணவனை மீண்டும் அடைந்து அதன் பின் பல காலம் கணவரோடு நலமாக வாழ்ந்து வந்தாள்"

சோமாவார விரதத்தின் பல்வேறு புராணங்களில் இதுவும் ஒன்று, குடும்பத்தில் கணவன் மனைவி ஒற்றுமை, குடும்ப பிரச்சனை உள்ளவர்கள் அனைவரும் அவசி யம் சோமவார விரதத்தினை கடைபிடித் தால் நிச்சயம் நல்லதே நடக்கும்.

– கீதாராஜன்,
சென்னை




# தாதுப் பொருள் சாஸ்திரம் கூறும்

# நவரத்தினங்கள்

பூமியில் உள்ள மக்கள் சிறப்பாக நல்வாழ்க்கை வாழ வேண்டும் என்பதால்தான் பல்வேறு சாஸ்திர சம்பிரதாயங்கள் தோன்றின, அந்த வகையில் ராசி, பரிகாரம், போன்றவைகள் குறித்து சாஸ்திர சம்பிரதாயங்களை முன்னோர் வரையறுத்து வைத்தனர்.

குறிப்பாக மகான்களையும், சித்தர்களையும் பூமியில் உலவ விட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, பல்வேறு சாஸ்திரங்கள் சம்பிரதாயங்களை படைக்கச் செய்தாள்.

அவற்றுள் ஒன்று தாதுப் பொருள்களைப் பற்றிய சாஸ்திரம். இதன் முக்கியப்பகுதி நவரத்தினங்களைப் பற்றியது. மணி என்று சுருக்கமாகக் குறிப்பிடப்படுகிறது இது. மூன்று முக்கிய சாஸ்திரங்களுள் முக்கியமானது மணிகள் பற்றியதாகும்.

ஆபத்துக் காலங்களிலும் அனைத்து சமயங் களிலும் உதவுவது மணி மந்திர ஔஷதமே என்று முன்னோர்கள் குறிப்பிடுவார்கள்.

மணி என்பதில் சோதிடம், வைத்தியம், வாஸ்து, எண் கணிதம், பக்தி எனப்படும் இறையருள் பெறும் துதி செய்தல் உள்ளிட்ட அனைத்துக் கலைகளும் இணைகின்றன.

மினரல் எனப்படும் தாது பொருள்களை கணக்கி அடங்காத அளவில் பூமித்தாய் தந்திருக் கிறாள். அவற்றில் 300 அரிய தாதுக்களை அறிஞர்கள் இனம் கண்டுள்ளனர்; அவற்றின் அரிய பயன்களைச் சொல்லி வருகின்றனர்.

இந்த முன்னூறில் சுமார் எண்பதுக்கும் மேற்பட்டவற்றை அரிதான மணிகள் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த எண்பதில் ஒன்பது மணிகளை உலகில் உள்ள அனைத்து பழைய நாகரிகங்களும் உச்சி மேல் வைத்துக் கொண்டாடுகின்றன. ஒன்பது மணிகளை நவரத்தினங்கள் என்று சந்தோஷத்துடன் குறிப் பிடுகிறோம். ஏனையவை உபரத்தினங்கள் எனப்படும். வணிக நோக்கில் இவை ராசிக் கற்கள் என்ற பெயரைப் பெறுகின்றன.




அவையாவன :

**1.மாணிக்கம், 2.முத்து, 3.பவளம், 4.மரகதம், 5.புஷ்பராகம், 6.வைரம், 7.நீலக்கல், 8.கோமேதகம், 9.வைடூரியம்** ஆகியவையாகும்.

கருட புராணம், சரக சம்ஹிதை, ஜோதிட சாஸ்திரம் உள்ளிட்ட நூல்கள் ஒவ்வொரு ரத்தினத்தின் பயனையும் தன்மையையும் விரிவாக விளக்குகின்றன. இவை பிரமிப்பை ஊட்டுபவை; ஏனெனில் இன்று அறிவியல் பல நவீன சாதனங்களின் உதவியால் கூறுபவற்றை அவை தீர்க்கமாக துல்லியமாகப் பல்லாண்டுகளுக்கு முன்பேயே குறிப்பிட்டிருப்பதால் தான் இந்த பிரமிப்பு.

ஆயுள் நீட்டிக்க ரத்தினக் கற்களை அணிக என்று ஆணையிடுகிறார் சரகர். தேர்ந்த மருத்துவரான இவர் நூறு வயது வாழ்வதற்கான வழிகளைத் தெள்ளத் தெளிவாக தனது சரக சம்ஹிதை நூலில் விளக்குகிறார்.

ரத்னக் கற்களை கைகளில் அணியாமலோ, குளிக்காமலோ சாப்பிடக் கூடாது என்று வலியுறுத்தும் அவர் மூலிகைகளை உடலிலே தரிக்குமாறும் அறிவுறுத்துகிறார்.

ரத்தினங்களை அலசுவோம்:

**மாணிக்கம்:**

உஷ்ண அலைகளை வெளிப்படுத்துகிறது. இரத்தசோகை, கண் நோய், உடல் சோர்வு, இருதயக் கோளாறு போன்றவற்றை தீர்க்கும். குளிர்ச்சி சம்பந்தமான வியாதி களைப் போக்க வல்லது. குளிர், ஜன்னி முதலான வற்றை உடனே குணப்படுத்தும்.


புனிதவேல்

**முத்து:**

மன சம்பந்தமான அனைத்து நோய்களையும் தீர்க்கும். சுவாசக் கோளாறு, மனவளர்ச்சியின்மை, தொண்டை சம்பந்தமான கோளாறுகள், தலை வலி, தூக்கமின்மையை போக்கும், உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.

**பவளம்:**

வலிப்பு நோய், மகப்பேறின்மை, விரை வீக்கம், குடலிறக்கம், கல்லீரல் கோளாறு போன்றவற்றை தீர்க்கும் பக்கவாத நோயைக் குணப்படுத்தும். வயிறுக் கோளாறுகள், மலச்சிக்கல், நீரிழிவு நோய் ஆகியவற்றைப் போக்கும்.

**மரகதம்**

சோம்பல், தூக்கமின்மை, பசின்மை, கண் நரம்பு, முதுகு தொடர்பான கோளாறு போன்ற நோய்கள் தீர்க்கும். பில்லி சூனியத்தை நீக்கும். துர்தேவதைகளை விலகச் செய்யும்.

**புஷ்பராகம்:**

குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தை நீக்கி புத்திர பாக்கியத்தைத் தரும்; மலடை நீக்கும். கல்லீரல் கணையம், தொடர்பான வியாதிகள், கழுத்து வீக்கம், வயிறு கோளாறு, தைராய்டு சுரப்பிக் கோளாறு, அஜீரணம் போன்ற பிரச்சனைகள் நீங்கும்.

**வைரம்:**

குடும்ப ஒற்றுமையை ஓங்கச்

செய்யும். கலைகளில் வல்லவராக்கும். குறிப்பாக நாட்டியம், நடிப்பு, சினிமா துறையில் உள்ளோர் அணிய வேண்டிய கல் இது. வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்றின் தோஷங்களை நீக்க வல்லது. பாலுணர்வு தொடர்பான நோய்கள், சரும வியாதிகள் போன்றவற்றை போக்கும்.



**நீலக்கல்:**

ஜல நீலம் மற்றும் இந்திர நீலம் என இது இரு வகைப்படும். தோல் நோய்களைப் போக்கும். தொழு நோய் உடையவர்கள் கூட இதை அணிந்து நலம் பெறலாம்.

கோமேதகம் பசியைத் தூண்டி ஜீரண சக்தியை அதிகரிக்கும். வாயு கோளாறு, பாலியல் நோய் போன்றவை கட்டுப்படும்.

வைடூரியம் வாழ்வில் ஏற்படும் பெருந் துன்பங்களிலிருந்து காக்க வல்லது. சளி, கபம் போன்ற பிரச்சனைகள் விலகும்.

இப்படிப்பட்ட ரத்தினங்களை ஜோதிட சாஸ்திரம் ஆதரிக்கிறது; அணிந்து பயன் பெறுமாறு அறிவுறுத்துகிறது. கற்களுக்கும் கிரகங்களுக்கும் உள்ள தொடர்பை ஜோதிட நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

| | |
|---|---|
| சூரியன் | மாணிக்கம், |
| சந்திரன் | முத்து, |
| செவ்வாய் | பவளம், |
| புதன் | மரகதம், |
| குரு | புஷ்பராகம், |
| சுக்ரன் | வைரம் |
| சனி | நீலக்கல், |
| ராகு | கோமேதகம், |
| கேது | வைடூரியம் |

நவமணிகளும் கிரக தோஷங்களைப் போக்க வல்லவை. ரத்தினங்களைத் தேர்ந்தெடுப்பது ஒரு தனிக்கலை. 'அறிவுறுத்தியபடி குறிப்பிட்ட கல்லை அணிந்தேன்; ஆனால் நல்லது நடக்கவில்லை; மாறாக நிலைமை மோசமானது' என்று ஒருவர் சொன்னால் அது பொய்யாக இருக்காது. அவர்அணிந்திருந்த கல் உண்மையான, தோஷ மற்ற கல்லா என்பதை ஆராய வேண்டும்.

தற்போது பணத்திற்காக ராசிக்கற்களை போலி யாக தயாரித்து விற்பனை செய்வது வழக்கமாக உள்ளது. போலி இராசிக்கற்கள் எதிர்மறையான பலனைத்தான் தரும்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

## ஆன்மீக மலர்கள்

- திரிசூலத்தில் குங்குமம் இட்டு, எலுமிச்சை பழம் குத்தி வழிபட, திருஷ்டி, செய்வினை தோஷம் நீங்கும்.
- ஜாதகப்படி சனிபகவானின் பாதிப்பு குறைய, திங்கட்கிழமைகளில் சிவ பெருமானுக்கு, பால் அபிஷேகம் செய்து, அர்ச்சனை செய்ய வேண்டும். சனிக் கிழமைகளில் கால பைரவர் சந்நிதியில் தேங்காய் உடைத்து, இரண்டு மூடி களிலும் நல்லெண்ணெய் ஊற்றி, தீபம் ஏற்றவும். சிவன் கோவிலில் கால பைரவரையும், விஷ்ணு கோவிலில் சக்கரத்தாழ்வாரையும் வழிபட செய் வினை தோஷம் நெருங்காது.
- வெள்ளெருக்கு விநாயகரை வீட்டு அறைகளில் கைக்கு எட்டாத உயரத் தில் வைத்து இருந்தால், ஏதும் பூதகண சேஷ்டைகள் இருந்தால் நின்று விடும்.
- கால பைரவர் சந்நிதியில் நெய்தீபம் ஏற்றி 12 முறை, 48 நாட்கள் சுற்றி வழிபட தொழில், வழக்குசாதகமாதல், பில்லி, சூனியம், ஏவல் நீங்கும்.
- செவ்வாய்கிழமைகளில் நெய்தீபம் ஏற்றி வழிபட கொடுத்த கடன் வசூல் ஆகும்.
- கொடுத்த கடன் வசூல் ஆக பைரவர் சந்நிதியில் தொடர்ந்து 8 செவ்வாய் கிழமைகளில் நெய்தீபம் ஏற்றி சகஸ்ர நாம அர்ச்சனை செய்ய வேண்டும்.



# மாரியம்மனால் பாதுகாக்கப்படும்
# ரேணுகாதேவியின் சிரசு

ஜமதக்னி ரேணு என்பவருடைய புத்திரியான ரேணுகா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு வசுமனன் முதலான புத்திரர்கள் பிறந்தார்கள்.

அவர்களுள் பரசுராமன் என்பவர் கடைசியாகப் பிறந்தார். அவன் பரந்தாமனுடைய அம்சமாகஅவதரித்தான். அவனே பூலோகத்தில் இருபத்தொரு க்ஷத்திரியப் பரம்பரையை வேரோடு அழித்தவன். இவன் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து பரசு என்ற கோடரியைப் பெற்ற காரணத்தால் இவனுக்கு பரசுராமன் என்ற பெயர் ஏற்பட்டது. தாய் தந்தையரிடம் மிகவும் அன்பு கொண்டவர் பரசுராமன்.




ரேணுகாதேவியின் மற்றொரு பெயர் சீலவதிஎன்பதா கும். அவள் தன் கணவனைத் தவிரஉலகில் வேறு தெய்வமே கிடையாது என்ற கொள்கையும் நினைப்பும் கொண்டவள்.

தினமும்அவள் ஆறு, குளம் போன்ற நீர் நிலைக்குச் சென்று அங்கே மண்ணைக் கையில் எடுத்துப் பிசைவாள்.

நான்கற்புக்கரசிஎன்பது உண்மையானால்நான்பிசைந்த மண் அழகிய மண்குட மாக மாறட்டும்! என்பாள். அது குடமாக மாறும். பின்பு அதில் தண்ணீர் மொண்டு வந்து. இது அவளுக்குவாடிக்கை. இப்படிக் கொண்டு வந்த தண்ணீரைத் தான் அவள் கணவராகிய ஜமதக்னி முனிவருடைய பூஜைக்கு வழங்குவாள்.

இதுபோன்று ஒருநாள் நீர்நிலைக்குச் சென்ற ரேணுகாதேவி தரையில் குனிந்து குடம் செய்வதற்குரிய மண்ணை அள்ளினாள்.

அப்படி அள்ளும் போது ஓர் தேவபுருஷன் உருவம் நீரில் நிழலிடுவதைக் கண்டாள். இது யார் என்று சற்று மேலே உற்றுப் பார்த்தாள். கற்பின் நிறைக்கு பதில் களங்கம் தெரிந்தது.

மன சஞ்சலம் அடைந்ததாள் மண் பானை செய்ய ரேணுகாதேவியால் முடியவில்லை, தன் பூஜைக்குத் தண்ணீர் கொண்டுவரச் சென்றவள் இன்னும் வரவில்லையே என்று சிந்தித்தார் ஜமதக்னி முனிவர்.

தன் ஞானக் கண்ணால் அவள் கற்புக்கு களங்கம் ஏற்பட்டதை அறிந்தார். சினம் பொங்க தன் புதல்வர்களை வரவழைத்து அழுக்கு உள்ளம் கொண்ட தாயைக் கொல்லுமாறு கர்ஜித்தார். மற்ற பிள்ளைகள் அனைவரும் தயங்கினர். தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்பதற்கேற்ப பரசுராமர் தன் பரசு என்ற ஆயுதத்தை எடுத்தார்.

அன்னையின்மீது வீசினார். அவள்தலை கீழே விழுந்தது. கூடவே சகோதரர்களின் தலைகளும் உருண்டன. ஜமதக்னி முனிவருக்கு சாந்தம் வரவில்லை என்றாலும் தன் சொல்லைக் காப்பாற்றிய பிள்ளையை ஏறிட்டு பார்த்தார்.

பரசுராமா! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் என்றார்.

இறந்த என் தாயும் சகோதரர்களும் உயிரோடு எழ வேண்டும். அதோடு நான் அவர்களைக் கொன்றேன் என்ற நினைப்பின்நிழல்கூட அவர்களுக்குத் தெரியக் கூடாதுஎன்று வரம் கேட்டார்.

இந்த சம்பவத்தில், கற்புக்கரசியான ரேணுகாதேவியின் வெட்டப்பட்ட தலையை மாரியம்மன் பாதுகாத்தாள் என்று புராணங்கள் கூற்று. இதனால்தான் மாரியம்மன் கோவில்களில், அம்மன் பாதங்கள் அருகில் தலை மட்டும் உள்ள பெண் உருவம் பல்வேறு அம்மன் சன்னதிகளில் வழிபடப்பட்டுவருகிறது.

மாரியம்மன் சன்னதியில் இதுபோன்ற ரேணுகாதேவியுடன் கூடிய மாரியம்மனை வழிபடும்போதும், பெண்களுக்கு பாதுகாப்பும், கற்புக்கரசியாகவும் திகழ்வார்கள் என்று கூறப்படுகிறது.

# உருவ வழிபாடும் விவேகானந்தரின் விளக்கமும்

சுவாமி விவேகானந்தர் ஒரு முறை ஆல்வார் சமஸ்தானத்திற்குச் சென்றார். அங்கு இருந்த மகாராஜா மங்கள்சிங் விவேகானந்தரை அன்புடன் வரவேற்றார்.

மகாராஜாவுக்கு இறைவழிபாட்டில் பல சந்தேகங்கள் இருந்தன. குறிப்பாக அவர் விக்ரக வழிபாட்டை ஏற்கவில்லை. எனவே விவேகானந்தரிடம் கேள்வி கேட்டார்.

கல்லாலும் உலோகத்தாலும் ஆன இந்த விக்ரகங்களில் என்ன சக்தி இருக்கிறது என்று இவற்றை நாம் வணங்க வேண்டும் அறியாமல் இவற்றை வணங்குவது முட்டாள்தனம் அல்லவா என்று கேட்டார்.

விவேகானந்தர் மகாராஜவின் கீழ் இருக்கும் ஒரு திவானை அழைத்தார்.

அந்த அறையில் மாட்டப்பட்டிருந்த மகாராஜாவின் உருவப் படத்தை கழற்றிக் கொண்டு வருமாறு பணித்தார்.

திவானும் அவ்வாறே கழற்றிக் கொண்டு வந்தார்.

பின் திவானைப் பார்த்து ‘‘இதன் மீது துப்புங்கள்’’ என்றார்.

திவான் திகைத்துப் போனார்.

அய்யோ இது மகாராஜாவின் உருவப்படம் ஆயிற்றே எப்படி இதில் துப்புவது என்றார் அச்சத்துடன்.

சரி உங்களுக்கு அச்சமாக இருந்தால் வேண்டாம் வேறு யாராவது வந்து துப்புங்கள் என்றார் விவேகானந்தர்.

அனைவரும் பேயறைந்தது போல் விழித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தனரே அன்றி அதைச் செய்வதற்கு யாரும் முன் வரவில்லை.

உடனே விவேகானந்தர் ‘‘நான் என்ன உங்கள் மகாராஜாவின் முகத்தின் மீதா எச்சில் துப்பச் சொன்னேன். இந்த சாதாரண படத்தின் மீது தானே துப்பச் சொன்னேன். அதற்கு ஏன் இத்தனை தயக்கம்’’ என்றார்.

யாரும் பதில் பேச முடியாமல் திகைத்துப் போய் விவேகானந்தர் முகத்தையும் மன்னரின் முகத்தையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தனர். விவேகானந்தரிடம் திவான் மட்டும் தயக்கத்துடன் ‘‘சுவாமி மன்னிக்க வேண்டும். இது இந்த நாட்டைக் காக்கின்ற மகாராஜாவின் உருவப்படம். இதில் துப்புவது என்பது அவர் மேலேயே துப்பி அவமானம் செய்வது போலாகும். அதை எப்படி எங்களால் செய்ய முடியும்? ஆகவே எங்களை மன்னிக்க வேண்டும் எங்களால் முடியாது’’ என்று கூறினார்.

மன்னரோ சுவாமிகள் வேண்டுமென்றே தன்னை அவமானப் படுத்துகிறாரோ என்று எண்ணி புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

விவேகானந்தர் மகாராஜாவிடம் ‘‘இந்த உருவப்படம் மகாராஜாவைப் போல இருக்கிறது. ஆனால் இது மகாராஜாவாகி விட முடியாது. ஆனாலும் இதை நீங்கள் மகாராஜாவாகவே தான் கருதுகிறீர்கள். அது போலத் தான் இறைவனும் இறைவன் எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருந்தாலும் விக்ரகங்களிலும் கற்களிலும் அவரது தெய்வீக அம்சம் இருப்பதாகவே கருதி மக்கள் வழிபடுகிறார்கள். ஆராதனை செய்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்’’ என்று கூறி விளக்கினார்.

மகாராஜா விக்ரக வழிபாட்டின் பெருமையையும் அதன் உண்மையை உணர்ந்து சுவாமிகளின் மேன்மையையும் புரிந்து கொண்டார். தனது தவறான கேள்விக்காக தன்னை மன்னிக்குமாறு வேண்டி விவேகானந்தரின் ஆசியைப் பெற்றார்.



## 13–11–2021 சனிக்கிழமை, ஐப்பசி–27 அன்று மாலை 6.21 மணி அளவில் குருபெயர்ச்சி நடைபெறவுள்ளது

# குருபெயர்ச்சி பலன்கள்

ஸ்ரீ ஆதித்யாயச
சோமாய மங்களாய புதாயச
குரு சுக்ர சனிப்பயச்ச ராஹவே
கேதவே நம:

அன்பிற்கினிய ஆன்மிக அன்பர்களே.

13–11–2021 சனிக்கிழமை, ஐப்பசி–27 ஆம் நன்னாளன்று மாலை 6.21 மணி அளவில் ஸ்ரீ குருபகவான் கும்ப ராசிக்கு செல்கிறார். 12–ஆண்டுகளுக்கு ஒருமுறை தேவகுரு பிரகஸ்பதி கும்ப ராசியில் சஞ்சாரம் செய்து ஒவ்வொருவரின் ராசிப்படி என்னென்ன பலன்கள் தருவார் என்பதை காண்போம்!

இந்த குரு பெயர்ச்சியால் அதிகளவு நன்மை பெறக்கூடிய ராசிகள் மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், மகரம் ஆகும். மத்திம பலன்களை பெறக்கூடிய ராசிகள் விருட்சிகம், தனுசு ஆகும். தீய பலன்களை பெறக்கூடிய ராசிகள் ரிஷபம், கடகம், கன்னி, கும்பம், மீனம் ஆகும். எனவே, அனைத்து ராசி அன்பர்களும் இந்த குருபெயர்ச்சி மஹாயாக பூஜையில் பங்கேற்று அர்ச்சனை செய்து கொள்வது மிகவும் சிறந்த பரிகாரமாகும்.

### மேஷம்: (லாப குரு)



11ஆம் இடமான லாப ஸ்தானத்தில் தேவகுரு சஞ்சரிக்கிறார். தனக்காரனான குருபகவான் லாபம் தரும் இடத்தில் சஞ்சரிப்பதால் தனலாபம், பொன் பொருள் சேர்க்கைஏற்படும். தொழிலில் வெற்றி, நல்ல லாபம் கிடைக்கும். புதியதாக தொழில் தொடங்குவீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு ஏற்படும். வேலைக்காக காத்திருப்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். காதலில் வெற்றியும், திருமண யோகமும் அமையும். புத்திர சம்பத்து, வீடு மனை வாகன யோகம் அமையும். புகழ் செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படும். கடன் அடைபடும். மொத்தத்தில் இந்த குருபெயர்ச்சியில் பலவித லாபங்களுடன் நன்மைகளும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் பன்மடங்கு பெறுகும்.

### ரிஷபம்: (பதவியை பறிக்கும் குரு)



10ஆம் இடமான தொழில், ஜீவன ஸ்தானத்திற்கு குருபகவான் வருகிறார். கோட்சார ரீதியாக குருபகவானுக்கு உகந்த இடம் பத்து அல்ல. பத்திலே குரு பதவியை பறிக்கும் என்ற ஜோதிட சொல்லுக்கு ஏற்ப தொழிலில் பல பிரச்சனைகள் ஏற்படும். தொழிலில் நஷ்டம், பின்னடைவு ஏற்படும். கூட்டுத் தொழிலில் பிரச்சனைகள், கடன் தொல்லை, அவமானம், அவப்பெயர் ஏற்படும். உத்தியோகத்தில் செய்யாத குற்றத்திற்காக சஸ்பெண்ட் டிஸ்மிஸ் கூட நடைபெறும். மொத்தத்தில் யார் எந்த தொழிலில் ஈடுபட்டி ருந்தாலும் பல பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். பணமுடக்கம், வீண் விரையம், வீடு, வாகனத்தால் செலவு, மருத்துவச் செலவு ஏற்படும். காதலில் தோல்வி, திருமணம் தள்ளி போகுதல் நடைபெறும். யாரையும் நம்பி ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். கோர்ட் கேஸ் என்று அலைய வேண்டி இருக்கும்.

பெண்களுக்கு அவப்பெயர் ஏற்படும். கணவன்மனைவிக்குள் சண்டை சச்சரவு வரும். உடல் நிலையில் பாதிப்பு ஏற்படும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.

### மிதுனம்: (பாக்கியம் தரும் குரு)



9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில்அமர்ந்து உங்கள் ராசிநாதனான தேவகுரு பிரகஸ்பதி உங்களை பார்வையிடப் போகிறார். குரு பகவானின் பார்வையால் எல்லாவித நன்மை களும் வரப்போகிறது. ஓடிப்போன வனுக்கு ஒன்பதாமிடத்து குரு என்பார்கள். இந்த ஒன்ப தாமிடத்தில் குருபகவான் நீங்கள் நினைத்ததை எல்லாம் நடத்தி வைக்கப் போகிறார்.

இந்த ஒரு வருடம் தங்களுக்கு பொற்

www.aanmeegamalar.com

காலமாகும். தொழிலில் நல்ல முன்னேற்றம், லாபம் ஏற்படும். சிலர் புதிய தொழில் தொடங்கு வீர்கள். பொன், பொருள், வாகனம் சேரும். சிலர் வீடு மனை வாங்குவீர்கள். தள்ளிப்போன திருமணம் கைகூடும். காதலில் வெற்றி, புத்திர சம்பத்து

ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்று மையும் ஏற்படும். வேலையில்லாவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு அமையும். பெரிய மனிதர்களின் ஆதரவு, தெய்வ தரிசனம் கிடைக்கும். நோய் கட்டுக்குள் அடங்கி இருக்கும். இருப்பினும் தங்களுக்கு அஷ்டமத்தில் சனிபகவான் இருப்பதால் மன உலைச்சலும் அவ்வப்போது வரும். எதிலும் கவனம் தேவை. ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேலும் பல பெருகும்.

## கடகம்: (கஷ்டம் தரும் அஷ்டம குரு)



8ஆம் இடமான அஷ்டமஸ்தானத் தில்குரு பகவான் அமர்வது நல்லதல்ல. எதிலும் கவனம் தேவை. எடுத்த செயல் எல்லாம் தோல்வியில் முடியும். எப்போதும் டென்ஷனாகவேஇருப்பீர்கள்.சோம்பல், தூக்கம், நோய் நொடி உங்களை ஆட்கொள் ளும். ஒரு சிலருக்கு பைத்தியம் பிடிக்காத குறை தான்! மனதை தளரவிடாதீர். உண்மையான பக்தியின்மூலம் இந்த சோத னைகளை நீங்கள் வெல்லமுடியும்.

தொழிலில் மட்டுமல்ல, திருமணம், வேலை வாய்ப்பு என அனைத்திலும் இழுபறிதான். இந்த ஒரு வருடம் தங்களுக்கு மிகவும் சோத னை காலமாகும். நகைகள் அடகு கடைக்கு போகும். வீடு, வாகனம் என அனைத்திலும் வீண் செலவு ஏற்படும். உடல் நிலை கோளா றால் மருத்துவ செலவு ஏற்படும். B.P இல்லாத வர்களுக்கு கூட B.P வரும். கடன் தொல்லை, எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். புதிய தொழிலுக்கு இப்போது ஏதும் முயற்சிக்க வேண்டாம். உத்தி யோகஸ்தர்களுக்கு அவப் பெயர், விரும்பாத இடமாற்றம் ஏற்படும். ஸ்ரீ நவக்கிரக எந்திரம் அல்லது ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்சய எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும்.

## சிம்மம்: (வெற்றி தரும் குரு)



7ஆம் இடமான களத்திரம், கூட்டுத்தொழில், மக்கள் சக்தி, திருமணம், காமம் ஆகிய ஸ்தானத்தில் குருபகவான் சஞ் சரிக்கிறார். குருபகவானின் பார்வை உங்களுக்கு கிடைத் திருக்கிறது. இது மிகவும் விசேஷமாகும். குருபகவானின் பார்வையில் அனைத்திலும் முன்னேற்றமும், வெற்றியும் உண்டாகும். குரு பார்க்க கோடி பாவம் நிவர்த்தி என்று சொல்லுவார்கள். எனவே, குருபகவானின் பார்வையால் தொழிலில் நல்ல முன்னேற்றமும் லாபமும் ஏற்படும். கூட்டுத்தொழிலில் சிறக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு, ஏற்படும். விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும்.

நண்பர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிட்டும். கணவன், மனைவி உறவு சிறக்கும். திருமணம் கை கூடும். வீடு, வாகனம், பொன், பொருள், பணம் சேரும். சிலர் வெளிநாடு செல் வீர்கள். கோர்டு கேஸ் உங்களுக்கு சாதகமாக முடியும். எல்லா முயற்சிகளும் வெற்றியை தரும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் பெருகும்.

## கன்னி: (கடன், எதிர்ப்பு, நோய் தரும் குரு)



6ஆம் இடமான கடன்,எதிர்ப்பு, நோய் ஆகிய ஸ்தானத்தில் குருபகவான் அமர்வது அவ யோகத்தை தரும். எதிலும் தோல்வி, பயம், எதிர்ப்பு ஏற்படும். கடன் தொல்லை நோயின் தொல்லை அதிகரிக் கும். தேவையில்லாத வீண் பிரச்சனைகள் வரும். பணம், பொருள் இழப்பு ஏற்படும். தொழிலில் பின்னடைவு, நஷ்டம் ஏற்படும். வீடு வாகனத்தால் செலவு, மருத்துவ செலவு, பிள்ளைகள் வகையில் செலவு என கையில் வைத்திருக்கும் காசை கரைத்துவிடும். புதிதாக கடன் வாங்க வேண்டி வரும். நகைகள் அடகு வைக்க நேரிடும். வேலை செய்யுமிடத்தில் பகை,எதிர்ப்பு உண்டாகும். மேலதிகாரிகளின் பகை உண்டாகும். சிலருக்கு சஸ்பெண்ட்,மெமோ போன்றவை கிடைக்கும். செய்யாத குற்றத்திற் காக அவப்பெயர் ஏற்படும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர துன்பம் குறையும்.

## துலாம்: (அதிர்ஷ்டம் தரும் குரு)



ஸ்ரீ குருபகவான் அதிர்ஷ்டம் தரும் 5ஆம் இடத்திலிருந்து உங்களை பார்வையிடுகிறார். குருபகவானின் பார்வையாலும், பலத்தாலும் பல அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களை தேடி வரப்போகின்றன. எடுத்த முயற்சிகளில் எல்லாம் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். அதிர்ஷ்டலட்சுமி உங்களிடம் குடிக்கொள்வாள். பொன், பொருள், பணம், வீடு, வாகனம், மனை என சேரும். தொழிலில் நல்ல இலாபமும், வெற்றியும் கிடைக்கும். சிலர் புதிதாக தொழில் துவங்க நேரிடும். கடன் அடைப்படும். கோர்டு கேஸ் வழக்குகளில் வெற்றி உண்டாகும். புகழ்



"ஜோதிட ரத்னா" "ஆன்மிக செம்மல்" "சௌமியன்"
சித்தர் மகன். Dr.L.**சீனிவாசன்,** M.A.,D.A.,S.M.P.,
நிறுவனர் – செயலாளர், ஸ்ரீ தண்டபாணி ஆஸ்ரம
வாலைச்சித்தர் அறக்கட்டளை பூஜா அமைப்புக்குழு செயலாளர்,
தலைவர். ருத்ர மைந்தன் சேனை,
பொதுச்செயலாளர். வாலைச்சித்தர் ஆன்மிக பேரவை,
திருவண்ணாமலை.
Mob & Whatsapp: **+919894803009**
Website: www.valaisiddar.com

செல்வாக்கு உயரும். எதிர்பாராத வித மாக பெருமளவு பணம் கிடைக்கும். கடன் அடை படும். பதவி உயர்வால், சம்பள உயர்வு ஏற்படும். விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு, அரசு ஆதரவு கிடைக்கும்.

திருமணம் கைகூடும். காதலில் வெற்றி, குழந்தை பாக்கியம் ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். சிலர் வெளிநாடு செல்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் அதிகரிக்கும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேன்மேலும் பெருகும்.

## விருச்சிகம்: (நடு நிலை தரும் குரு)



4ஆம் இடமான வீடு, நிலம், மனை, வாகனம் ஆகிய சுகஸ்தானத்தில் குருபகவான் சஞ்சரிக்கிறார். 4ஆம் இடம் குருபகவானுக்கு கோட்சாரப்படி ஏற்ற இடம் இல்லை என்றாலும் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்த மாட்டார். அதே சமயம் நல்லதையும் செய்யமாட்டார். ஆனால், எதிலும் மந்த நிலை இருக்கும். பண வரவில் மந்த நிலை, தொழிலில் மந்த நிலை என அனைத்து முயற்சிகளிலும் மந்தநிலை இருக்கும்.

வீடு, வாகனம், நிலம், மனை போன்றவற்றில் செலவுகள் ஏற்படும். ஒரு சிலர் இவற்றை விற்கவும் செய்வீர்கள். புதிய பொன் ஆபரணங் கள் வாங்குவது கடினம். திருமணம் தள்ளிப் போகும். தாயிடம் மனவேற்றுமை ஏற்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதி காரிகளின் பகை ஏற்படும். தேவையற்ற விரும் பாத இடமாற்றம் ஏற்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு இழுபறியில் இருக்கும். தொலைதூர பயணம் ஏற்படும். ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர மந்த நிலை நீங்கி சில நன்மைகள் நடக்கும்.

## தனுசு: (போராட்டம் தரும் குரு)



3ஆம் இடமான தைரியம், சகோதரம், வீரியம் ஆகிய ஸ்தானத்திற்கு குருபகவான் வருகிறார். 3ஆமிடம் என்பது குருபகவானுக்கு ஏற்ற இடம் இல்லை. எதிலும் கவனம் தேவை. எதையும் நிறுத்தி நிதானமாக யோசித்து முடிவு எடுங்கள். தொழிலில் மந்த நிலை இருக்கும். பண வரவு தடைபடும். புதிதாக பொன் பொருள் சேருவது கடினம். நோயின் தொல்லை, கடன் தொல்லை இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். எதிலும் டென்ஷன் இருக்கும். திருமணம் தள்ளி போகும். கணவன்மனைவிக்குள் பிரச்சனை ஏற்படும். உடலில், மனதில் சோர்வு ஏற்படும். வேலை செய்யுமிடத்தில் பிரச்சனைகள் ஏற்படும். அலைச்சல் ஏற்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு தடைப்படும். தேவையற்ற விரும்பாத இடமாற்றம் இருக்கும். 71/2 ஆண்டு பாத சனிபகவானின் தொல்லையும் இருக்கும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர சிரமங்கள் குறையும்.

## மகரம்: (பொற்காலம் தரும் குரு)



2ஆம் இடமான தனம், குடும்பம், வாக்கு, லட்சியம் ஆகிய ஸ்தானத்தில் பொன்னவன் குருபகவான் சஞ்சரிக்கிறார். மகர ராசி அன்பர்களேஉங்களுக்கு பொற்காலம்வந்தாச்சு. இந்த குருபெயர்ச்சியால் நீங்கள் பட்டு வரும் கஷ்டங்கள் நீங்கும். தொழிலில் நல்ல முன் னேற்றமும், லாபமும் ஏற்படும். சிலர் புதிய தொழில் தொடங்குவீர்கள். பதவி உயர்வு, சம்பள உயர்வு, விரும்பிய இடத்திற்கு இட மாற்றம் ஆகியவை கிடைக்கும். நல்ல வேலை வாய்ப்பு, திருமண யோகம், புத்திரபேறு ஏற்படும். சிலர் வெளிநாடு செல்வீர்கள். பணம், பொன், பொருள், வாகனம்

www.aanmeegamalar.com




சேரும். சிலர் வீடு, மனை வாங்குவீர்கள். கடன் அடைபடும். குடும் பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். இருப்பினும் தாங்கள் 71/2 சனிபகவானின் பிடியில் இருப்பதை மறவாதீர்கள். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரத்தை பூஜித்து வர நன்மைகள் மேலும் பெறுகும்.

**கும்பம்:** (மனசஞ்சலம் தரும் ஜென்ம குரு)



ஸ்ரீ குருபகவான் உங்கள் ஜென்ம ராசிக்கு தான் வருகிறார். எனவே இந்த குருபெயர்ச் சியால் உங்களுக்கு நன்மைகள் குறைவாகவும், தீமைகள் அதிகமாகவும் ஏற்படும். ஜென்ம குருவால் மனசஞ்சலம், வீண் அலைச்சல், குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். தொழிலில் போட்டியும், பின்னடைவும் ஏற்படும். மேலதிகாரிகளின் பகை விரும்பத்தகாத இடமாற்றம், எதிலும் டென்சன் ஏற்படும். கடன் தொல்லை, உடல் சோர்வு, தொலை தூர பயணம் ஏற்படும். எதிலும் கவனமாக இருக்க வேண்டும். 71/2 ஆண்டு சனிபகவானின் சஞ்சாரமும் தங்களுக்கு சாதகமாக இல்லை. ஸ்ரீ நவக்கிரக எந்திரத்தை பூஜித்து வர துன்பங்கள் குறையும். கூடும்.

**மீனம்:** (சுப செலவுகளை தரும் குரு)



12ஆம் இடமான விரைய (செலவு) ஸ்தா னத்தில் குருபகவான் சஞ் சரிக்கிறார். விரைய குருவால் உங்களுக்கு சுபசெலவுகள் ஏற்படும். உங்கள் வீட்டில் திருமண வைபோகமோ, வீடு கட்டுதலோ, வாகனம் வாங்குதலோ போன்ற நல்ல காரியங்களுக்கு செலவுகள் செய்ய நேரிடும்.

அதே சமயம் தொழிலில் பின்னடைவு, கடன் வாங்குதல், எதிரிகளின் தொல்லை, நோயின் தொல்லை, மருத்துவ செலவு வீண் சண்டை சச்சரவு, கோர்ட்டு கேஸ் வம்பு வழக்கு போன்ற தீய பலன்களும் ஏற்படும். ஒரு சிலர் வெளிநாடு செல்லக்கூடும். எது எப்படி இருந்தாலும் பணம் உங்கள் கையைவிட்டு கரையும். பலவித பிரச்சனைகளும் உங்களை துரத்தும். ஸ்ரீ குபேர தனாகர்ஷண எந்திரம் அல்லது ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்சய எந்திரத்தை பூஜித்து வர சிரமங்கள் குறையும்.

www.aanmeegamalar.com



மீல் மேக்கர் கிரேவி
MEAL MAKER GRAVY
YouTube
கீதாசமையல்
சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம்,
கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்
கீதாசமையல்
கோதுமை ஜவ்வரசி அடை
WHEAT SAGO ADAI
ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்
பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்
YouTube
LIKE & SHARE




# இடி மின்னல் மற்றும் புதிய நோய்களை பற்றி விரிவாக கூறும் மந்திரங்கள்

ஜுரம் அம்மை நோய் போலவே தலைவலி இருமல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களையும் குணப்படுத்த கோரும் பாடல்களும் அதர்வண வேதத்தில் இருக்கிறது. இந்த நோய்கள் மின்னல்களால் ஏற்படுவதாக வேதகால மக்கள் நம்பினர்.

அதற்கு காரணம் மழையில் நனைந்து நோய் வந்தாலும் கூட அதற்கான குற்றத்தை தானியங்களை விளைவிக்க வரும் மழையின் மீது சுமத்த வேதகால மக்கள் விரும்ப வில்லை வானை கிழித்து கண்ணை பறிக்கும் மின்னல் மீது சுமத்தினால் நன்றி கொன்ற தன்மையிலிருந்து தப்பித்து விடலாம் என்று நம்பினார்கள். மின்னலால்தான் ஜுரம் நோய் வருகிறது என்ற நம்பிக்கையில் எழுந்த பாடலை பார்ப்போம்.

மேகங்களின் கருப்பையில்இருந்து சிவப்புவண்ண எறுது ஒன்று வெளி வருகிறது. காற்றும் மழையும் இடியும் அதன் பிரசவத்தை கவனித்துக் கொள்கின்றன. அப்படி பிறக்கும் மின்னல் என்னும் எறுது நம்மீது பாயாமல் நேராக போகட்டும் காரணம் அவன் அடிக்கடி வராவிட்டாலும் அத்திமரப்பூபோல் தாக்குதலுக்கு ஒரு முறை ஆளானாலே போதும் நாம் சின்னாபின்னமாகி விடுவோம்.

குளிர் நோய்களின் அன்னை மின்னலே ஆகும். இவனால் தொடப்பட்டவர்கள் நிம்மதியை இழந்து விடுவார்கள். நம்மை இவன் ஒடுக்குகிறான், வதைக்கிறான், நடுநடுங்க செய்கிறான் இவன் இறங்குவதற்கான இடம் மலைகளும் வெட்ட வெளிகளும் தான் எங்கள் வீடுகள் அல்ல அதோ விண்ணைநோக்கி மரங்கள் வளர்ந்து நிற்கின்றன.

பாம்புகளைப் போல் மலைகள் படுத்து கிடக்கின்றன. வெட்டவெளி பிரதேசமோ மடிவிரித்த அன்னை போல் மலர்ந்து கிடக்கிறது. நீ அவர்களை தாக்கு அவர்கள் பலவான்கள் பதிலுக்கு

கடவுள் உருவாக்கிய மதம்

அவர்கள் உன்னை தாக்குவார்கள். அல்லது உனது தாக்குதலையாவது தாங்கி கொள்வார்கள்.

பலசாலிகளை விட்டுவிட்டு பல ஹீனர்களை தாக்குவது வீரனுக்கு அழகல்ல சண்டை போட தகுந்த மல்லர்கள் இருக்கும் போது குழந்தை களிடம் மல்லுக்கு நிற்பது பாராட்டக் கூடிய செயலாகாது அதனால் எங் களை விட்டு விடு நாங்கள் இன்னும் கொஞ்ச காலம் வாழ விரும்புகிறோம் அதற்குள் எங்களை விறகுகளின் மேடைகளில் படுக்க வைத்துவிடாதே.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

நாங்கள் இந்த மண்ணில் நெடுங்காலம் வாழு ஆசைபடுகிறோம். நூறு கோடைகாலத்தையும் நூறு குளிர் காலத்தையும் பார்க்க விரும்புகிறோம். இந்திரனும், அக்னியும், பிரகஸ்பதியும் இதற்கான வரத்தை தர சித்தமாக இருக்கிறார்கள். மரண தேவன் கரம் நீட்டி அழைக்கும் பொழுதெல்லாம் எங்களை காப்பாற்ற தேவாதி தேவர்கள் தயாராக இருக்கிறார்கள். நல்ல பழங்கள் கனிந்து தொங்கும் போது அதை விட்டுவிட்டு பச்சை காய்களை கடித்து துப்பும் குரங்கை போன்று எங்களை குதறி விடாதே மற்ற தேவர்கள் எங்கள் மீது கருணையை பொழியும் பொழுது நீ மட்டும் நெருப்பை உமிழ்வது நீதியாகாது.

வாயு தேவனே நீ அண்ட சராசரங்களில் உணர்ந்து கொள்ள முடியாத எத்தனையோ இடங்களில் தங்கி இருக்கிறாய். இந்த பூமியும் நீ வாழுகின்ற இடமாகும் அது மட்டுமல்ல எங்களது உடலும் நீ வாசம் செய்யும் பகுதியே ஆகும். நீ உள்ளே போகிறாய். வெளியே வருகிறாய் நாங்கள் தூங்கும் போதும் மயங்கும் போதும் கூட நாங்கள் அறியாமையிலேயே நீ இந்த செயலை செய்துகொண்டிருக்கிறாய் தயவு செய்து இத்தகைய வேலையை நிறுத்தாமல் தொடர்ச்சியாக எங்களிடத்தில் செய் உனது பயணத்தை எங்களிடம் இருந்து நீ துண்டித்துக் கொண்டால் மரணத்தில் வலையில் நாங்கள் விழுந்து விடுவோம். யம ராஜனை வெல்லும் தகுதி உனக்குதான் இருக்கிறது. கரங்களை கூப்பி சிரங்களை தாழ்த்தி உன்னை வணங்குகிறோம். நமது உறவு வெகு நாள் நீடிக்க வேண்டும்.

மனிதனே நீ மயங்காதே உனது நினைவுகளை தவறவிடாதே ஆயிரம் கயிறுகள் விண்ணை நோக்கி உன்னை இழுத்தாலும் மண்ணில் இருக்க தைரியத்துடன் போராடு ஆத்மாவை உதறித்தள்ள விரும்பாதே யம தூதர்கள் உன்னை அழைக்கலாம் வண்ண மயமான சொர்க்கம் உன் கண்ணில் தெரிய லாம் அதனால் தூதர்கள் பின்னால் செல்ல நினைக்காதே இந்த மண்தான் உனது வீடு இதை மறக்காதே மருந்துகளை ஏற்றுக் கொள்ள தயங்காதே இதை ஏற்றுக் கொள்ள உன்னை பயம் தடுக்கிறதா யமனை விரட்டும் போர்வீரர்கள் உன்தாயும் தகப்பனும் சகோதரியும், சகோதரனும் மருந்துகளே ஆகும்.

நோய்கள் உன்னை வதைக்கும் விதத்தை பார் எதற்கும் உதவாதவனாக அவைகள் உன்னை மாற்றுகிறது. பாறைபோல் உன்மேல் ஏறி அமர்ந்து கொண்டு அழுத்துகிறது. ஆற்றில் துவைத்த துணியை ஈரம்போக பிழிவதைபோல் உன் சரீரத்தையும் பிழிந்தெடுக்கின்றனர். நோய் என்னும் கொடிய மிருகத்தை கொன்று வீழ்த்தும் ஆயுதம்தான் மருந்துகள் இந்த மருந்து உனது உடலுடன் கலந்து விட்டால் நோய்கள் வந்தவழியே இந்திரனைக் கண்டு அசுரப்படைகள் போல் ஒடி ஒளிந்து விடும்.

இன்னும் பல நோய்களை பற்றியும் அவைகளை விளக்குவதை பற்றியும் ஏராளமான பாடல்களில் விவரித்து கூறப்பட்டுள்ளது. அவைகளெல்லாம் ஏறக்குறைய இப்போது கூறப்பட்ட பாடல்களின் சாயலிலே இருப்பதனாலும் அதை பயன்படுத்தும் முறைகளை பற்றி நாம் இப்போது பேசப் போவதில்லை என்பதாலும் வேறு வகையான பாடல்களை சிந்திப்போம் பெண்கள் தக்க பருவம் வந்துவிட்டால் அவர்களுக்கு திருமணம் முடித்து வைத்து விடுவது நமது மரபாகும். பெண்களின் திருமணம் என்பது சமுதாய அந்தஸ்டோடும் பொருளாதார நோக்கத்தோடும் இணைக்கப் பட்டிருப்பதால் மற்ற நாடுகளை விட நமது நாட்டின் திருமணத்திற்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறித்த காலத்தில் குழந்தைகளுக்கு திருமணம் நடைபெறாவிட்டால் பெற்றோர்கள் அதை பெரும் பாரமாகவும் கவலை யாகவும் கருதுகிறார்கள். அதனால் திருமணம் நடைபெற வேண்டி தெய்வீக சடங்குகள் பல செய்கிறார்கள் இந்த வழக்கம் இன்று புதிதாக தோன்றியது அல்ல வேதகாலத்திலும் இருந்திருக் கிறது. அப்படிப்பட்ட ஒரு சடங்கில் ஓதப்பட்ட பாடலை இப்போது பார்ப்போம்.

அக்னியே இந்த இளம்பெண்ணுக்கு

www.aanmeegamalar.com

எல்லா விதத்திலும் பொருத்தம் உள்ள கணவனை கண்டுபிடித்து கொடுப்பாயாக அவன் இவளது இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்பட்டும். அவன் இவளது வாழ்வில் அதிஷ்ட பொக்கிஷமாக அமையிட்டும் திருமண




மான பிறகு அவனால் இவளுக்கு களிப்பு ஏற்படட்டும். திருவிழா காலங்களில் இருவரும் இனிமையை அனுபவிக்கட்டும். இந்த திருமணம் சோமனின் அங்கிகாரத்தை பெற்றதாகட்டும். பிரம்மனும் இதற்கு இணக்கம் தெரிவிக்கட்டும் ஆயமான் என்னும் தெய்வம் திருமணத்தை முடித்து வைக்கட்டும். தாதர் என்னும் கடவுளும் தயங்காமல் ஆசிர்வாதம் செய்யட்டும். எல்லாத் தெய்வங்களும் இணைந்து தேடி கொடுத்த சௌந்தர்யம் நிரம்பிய வல்லமை பொருந்திய கணவனால் மகிழ்ச்சியை இவள் முழுமையாக அனுபவிக்கட்டும். அந்த மகிழ்ச்சி நெடுநாள் தொடரட்டும்.

இந்த பெண்ணுக்கு விரைவிலேயே கணவன் வருவான் அது உறுதி ஏனென்றால் இவள் அழகும். அறிவும் அடக்கமும் நிறைந்தவள். இவளுக்கு அழகை கொடுத்த சோமன்கணவன் வராமலா தடுத்து விடுவான் பெண்ணே உனது கணவனுக்கு நீ ராணியாக இரு அவன் உன்னை நெருங்கும் போது இனிமையான ஒளி உன்னிடமிருந்து பிரகாசிக்கட்டும். அவன் குழந் தைகளை வம்சம் தழைக்க சுமந்து கொடு செல்வத்தின் அதிபதியான இந்திரனே இவள் எத்தனை நாளைக்கு தனிமையில் இருப்பாள். சிதறிகிடக்கும் மாமிசத்துண்டுகளை கழுகுகள் கொத்துவது போல் தனிமையில் இருக்கும் இவளை மற்றவர்கள் கண்கள் கொத்தாதா. அதனால் இவளுக்குரியவனை ஆணையிட்டு அழைத்து வா உனது ஆணைக்கு கீழ் படியாத யாரையும் பூமியில் உண்டா இவளை மணக்க இருக்கும் இளைஞனின் மனதை இவளோடு இணைத்துவிடு

திருமணம் முடிவதற்கு எத்தகைய பிரயத்தனங்களை வேதகால மக்கள் செய்தார்களோ அதே அளவிற்கு கடுமையான முயற்சிகளை ஆண் குழந்தைகளை பெறுவதற்காகவும் செய்தனர். ஏனென்றால் ஆண்களின் பலம்தான் அவர்கள் சமூகத்தை பாதுகாத்து பகைவர்களிடமிருந்தும், கொடிய மிருகங்களிடமிருந்தும் ஆபத்து வராமல் தடுக்க முடியும் என்று நம்பினர். அந்த காலத்தில் பெண்களும் இந்த காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்றாலும் கூட ஆண்கள் தான் மிக முக்கியமாக இப்பணிகளை ஏற்றிருந்தனர். பகைவர்களோடும். மிருகங்களோடும் சண்டையிடுகின்றபோது ஆண் மக்கள் பல நேரங்களில் இறந்து விடுவதும் உண்டு அந்த காலி இடத்தை நிரப்புவதற்காக அடுத்தடுத்து ஆண்கள் பிறந்தால்தான் படைமாட்சி என்பது சிறப்புடன் இருக்கும் அதற்காக ஆண் குழந்தைகள் அதிகமாக வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அதனடிப்படையில் தேவதைகளிடம் வேண்டுதலையும் வைத்தனர். அந்த வேண்டுதல் எப்படி இருக்கிறது என்பதை பார்ப்போம்.

இவளது கர்ப்பபையில் ஒரு ஆண் சிசு உருவாகட்டும். அதற்காண வித்து வில்லிலிருந்து பாயும் அம்பைபோல் இவள் கருவளைக்கு விரையட்டும் பத்து மாதங்கள் நிறைவடைந்த பிறகு வீரத்திருமகனாக இந்த பூமியில் ஜனனம் எடுக்கட்டும் பெண்ணே உனது குழந்தைக்கு பால் கொடுக்கின்ற பொழுது உன் முலைக்காம்புகள் பசுவின் மடிக்காம்புகளாக மாறட்டும். காளை போல் உனது மகன் வீரமுடன் வளரட்டும். சக்தி மிகுந்த தாவரங்களிலுள்ள மூலிகைகளை நீ அருந்து அந்த மூலிகைகளின் தகப்பன் மழை மேகங்கள் உலா வருகின்ற ஆகாயமாகும். தாயோ உள்ளதை எல்லாம் வாரிக் கொடுக்கும் பூமி ஆகும். பூமிக்கும் ஆகாயத்திற்கும் பிறந்த மூலிகையை நீ அருந்துவதினால் உனது ஆண் மகவு நோய்களை எதிர்த்தும் வல்லமையோடு கூடியும் பிறப்பான்.

கரு உருவாக மட்டுமல்ல உருவானகரு சிதையாமல் முழுமையான குழந்தையாக பிறப்பதற்கான மந்திரப்பாடலும் அதர்வண வேதத்தில் இருக்கிறது. இந்த மண் எத்தனை வகையான மரவிதைகளை தனக்குள் ஏற்றுக் கொண்டு செழுமையாக வளர விடுகிறது. அதே போல இவளது கருப்பையும் ஒரு குழந்தையை உறுதியாக ஏற்கட்டும். இந்த மண்ணில் எத்தனை வகையான பறவைகளும், விலங்களும் வளருகின்றன. அதே போன்று இவளது மணி வயிற்றிலும் மழலைச் செல்வம் கருகாமல் வளருட்டும் என்ற பாடல் வரிகள் கருச்சிதைவை தடுக்க கோரி நிற்கின்றது.

அடுத்ததாக அமானுஷ்யமான விஷயங்களை பற்றி கூறும் வேத பாடல்களை சிந்திப்போம் அதர்வண வேதத்தில் வசியம் முதலான அஷ்டகர்மங்கள் தெளிவாக கூறுப்பட்டுள்ளது இந்த அஷ்டகர்மங்களை தந்ர சாஸ்திரபடி பிரயோகம் செய்து மனிதன், விலங்குகள் இயற்கை சக்திகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வழி

வகைகள் கூறப்பட்டிருக்கிறது. இந்த வழிமுறைகள் அனைத்தையும் கடும் முயற்சியுடனும் தூய பிரம் மச்சரிய விரதத்துடனும் பழக்கப் படுத்திக் கொண்டான் சாத்தியமே இல்லாதது என்று ஒதுக்க கூடிய அனைத்தையும் சாத்தியப்படுத்திக் காட்டலாம் என்பதை எனது சொந்த அனுபவத்தில் நான் நன்கு அறிந்திருக்கிறேன். இருந்தாலும் அந்த வழி முறைகளை பற்றிப் பேசுவது இந்த நூலின் நோக்கம் அல்ல என்பதனால் அதர்வண வேதத்திலுள்ள பேய்களை விரட்டும் மந்திரப் பாடல் ஒன்றை தமிழ்படுத்தி தருகிறேன். இதை படித்தாலே அதர்வண வேதத்திலுள்ள மந்திர சாஸ்த்திரத்தின் நுட்பத்தை ஒரளவு தெரிந்து கொள்ளலாம்.

ஏவலின் மூலமாக ஒரு பெண்ணிடத்தில் தீய சக்தி குடி புகுந்துவிட்டது அவள் மணமானவள் அதனால் அவளுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு அந்த கவலையை போக்கி அந்த பெண் ணை சகஜ நிலைக்கு கொண்டு வர ஒரு ரிஷி முயற்சிக்கிறார். அப்போது அவர் பிரயோகம் செய்த மந்திரத்தின் தமிழ் வடிவம் இதோ உங்கள் முன்னால் தருகிறேன்.

இவளிடமிருந்து தீய சக்தியே நீ ஓடிவிடு உன்னால் இவள் படும் பாடுகள் போதும் இவள் கைகள் குணமாகட்டும். அங்கே அழகு திரும் பட்டும் இவளை விட்டு நீ ஓடிவிட்டால் பழைய நிலைக்கு இவள் வந்துவிடுவள் திருமணம் முடிந்து கணவனை சந்தித்த நானத்துடன் கால் எடுத்து வைக்கும் போது எப்படி இவள் அழகு பொருந்தியவளாக இருந்தாளோ இவள் மேனியில் அழகு தேவதை எத்தகைய வர்ணஜாலங்களை நிரப்பி இருந்தாளோ அதே வடிவத்தை இவள் மீண்டும் பெறுவாள்

குடி வெறியில் ஆட்டம் போடும் குரங்கை போன்று குதித்து கும்மாளம் அடிக்கும் தீய சக்தியே எனது கையிலுள்ள மந்திர தண்டத்தை நன்றாக பார் இதனால் உன்னை தண்டிக்கும் முன்னால் ஓடி விடு நீ போய் விட்டால் இவளது குடும்பம் அமைதி அடையும் உன்னை ஏவி விட்டது யார் அவன் சூத்திரனா அரசகுமாரனா, அந்தன புரோகிதனா, அழகுடைய வைசீக பெண்ணா அது யாராக இருந்தாலும் அவர்களிடமே நீ திரும்பி விடு மறுத்தால் கணவனால் கைவிடப்பட்ட பெண்ணை போல் நீ கதறப்போகிறாய் அடிப்பட்ட கழுதையை போல் துடிக்கப்போகிறாய் எனது மந்திரங்கள் சூரியனிலிருந்து புறப்பட்ட கதிர்களை போல் உன்னை சுட்டுவிடப் போகிறது.

நீ நெருப்பில் விழுந்த பஞ்சு போல சாம்பலாகப் போகிறாய் இனி உன் வேலை நடக்காது உன்னை கால்களையும் கைகளையும் இணைத்து கட்டப்போகிறேன். உனது தலையை பின்புறமாக திருப்பப் போகிறேன். உன் விரல் நகங்களை தலைமுடியை இரும்பு கம்பியில் சுற்றி முறுக்கப்போகிறேன். எனது மந்திர வார்த்தைகள் உனது உடலெங்கும் துளைகளை போடட்டும். உனது இரண்டு செவிகளும் வவ்வால்களைப்போல் அருந்து தொங்கட்டும் இதோ உன்னை மந்திரச் சக்கரத்தில் உட்கார வைகிறேன். எனது மந்திரங்கள் கத்தியை போலவும், ஈட்டிகளை போலவும் உன் நெஞ்சை பிளக்கப்போகிறது.

அதிலிருந்து தெரிக்கும் பச்சை ரத்தத் துளிகள் உனது மேனி எங்கும் நெய்போல் பரவும் அக்னி தேவனின் செந்நிற நாக்குகள் உன்னை சாம்பலாக்கப் போகிறது விழிகள் பிதுங்க கோரை பற்கள் நீல நாக்கைத் தொங்கவிட்டு கருத்த மேனியுடன் பருந்த சதைகளோடு ஆட்டம் போடும் ஆலகால விஷமே நீ அழிந்து போ நீ வாசம் செய்யும் இந்த பெண்ணின் உடல் புனித அடையட்டும் புது பொலிவு பெறட்டும் என்பதாக அந்த பாடல் தொடர்ந்து செல்கிறது

மனித தேவைகளை நிறைவேற்ற வழிகூறும் அதர்வணவேதம் பிரம்மத்தை பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் நிறைவே பேசுகிறது இருப்பினும் அந்தக் கருத்துக்கள் ரிக் வேத சிந்தனைகளோடும் உபநிஷத தத்துவங்களோடும் பெருவாரியாக ஒத்து போகிறது எனவே அதைப்பற்றி அதாவது உபநிஷத தத்துவங்களை பற்றி அடுத்த அத்யாயத்தில் ஆழமாக சிந்திக்க போவதினால் இங்கே அதைப்பற்றி சொல்லாமல் விடுகிறேன்.

அதர்வண வேதம் மற்ற மூன்று வேதங்களைக் காட்டிலும் மக்களோடு இணைந்து வருவதினால் தனிச்சிறப்பு உடையது என்றே சொல்லலாம். ஒரு தகப்பனும் ஆச்சாயனும் வருங்கால தலைமுறைகளுக்கு சிக்கல்களை தீர்த்துக் கொள்ள எவ்வாறு வழிமுறைகள் கற்றுதருவார்களோ அதே போலவே அதர்வண வேதமும் மனிதன் வாழ்வில் ஏற்படும் சிறு சிக்கல்களிலிருந்து பெரிய சிக்கல் வரை ஏற்படாமல் தடுக்கவும் ஏற்பட்டால் அதிலிருந்து விடுதலை பெறவும் வழியை சொல்கிறது. எனவே அதர்வண வேதத்தை மக்களின் வேதம் என்று அடித்துச் சொல்லலாம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

# சுயநினைவுடன் தேகத்தினுள் புகவும், அதைவிட்டு வெளியேறவும் முடியும்

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: “ஆன்மீக வளர்ச்சியடைந்த அநேகர் தம் சொந்த சூட்சும தேகத்தைக் காணமுடியும். “நான் அவரைக் கண்டபோது அவருடைய பாதத்தில் இறந்தவனைப்போல் விழுந்தேன்” என்று ஒரு மகான் கூறினார். இறக்கும் சமயத்தில் உங்களுடைய சூட்சும தேகம் மேலெழும்போது அல்லது தேகத்தைவிட்டு நீங்கும்போது, உங்குளுடைய ஸ்தூல உடல் இறந்து விட்டதுபோலக் காண்கிறீர்கள். ஆன்மீக முன்னேற்றம் அடைந்துள்ள யோகிகள், தமது விருப்பப்படி ஸ்தூல உடலைத்தாண்டிச் செல்லும்பொழுது இதே அனுபவம் ஏற்படுகிறது. இவ்வாறே, உலகில் வாழ்ந்தாலும், தான் விவரிக்கும் சமாதிநிலையை அடைந்தபோது தனது பூதஉடல் இறந்துவிட்டதுபோல் காண்கின்றனர். இந்த முறையில் பூத உடலுக்குள் புகுவதும், வெளியேறுவதும் வேடிக்கையானது. ஆனால் தம்மால் அதைச்செய்யமுடியும் என எண்ணும் பலர், அதைக் கற்பனை மட்டுமே செய்கின்றனர். அது அவ்வாறு என நீங்கள் எண்ணுவதால் மட்டுமே அதை அவ்வாறு ஆக்கிவிடாது. அதற்கான உத்தியை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.”

மேலே கூறப்பட்டுள்ள விஷயம் சம்பந்தமாக குருதேவர் தமக்கு நிகழ்ந்த ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்: “நியூயார்க்கில் ஒருவர் என்னிடம் வந்து தன்னால் சூட்சும ரீதியாகப் பயணம் செய்ய முடியும் என உறுதியுடன் கூறினார். நான் கூறினேன், “உம்மால் அதைச் செய்ய முடியும் என நான் நினைக்கவில்லை. அப்படி உம்மால் அதைச் செய்ய முடியும் என்று நீர் கற்பனை மட்டுமே செய்கின்றீர்.” இருந்தும் நான் அவரை பரிசோதிக்கவேண்டும் என்று அவர் என்னை வற்புறுத்தினார். நான் ஒப்புக்கொண்டு, “சரி, கீழ் தளத்திற்கு சூட்சும ரீதியாகச்சென்று அங்குள்ள உணவுச்சாலையில் என்ன உள்ளது என்பதைச் சொல்லுங்கள்,” எனக் கூறினேன். அவர் ஒரு கணம் அமைதியாக இருந்தார்: பின்பு “வலப்பக்க மூலையில் ஒரு பெரிய பியானோ உள்ளது,” எனக் கூறினார். அவருடைய சுவாசமும் நாடித்துடிப்பும் சாதாரணமாக இருப்பதை நான் கவனித்திருந்ததால், அவர் அதைக் கற்பனை செய்கிறார் என எனக்குத் தெரிந்தது. “அதற்கு மாறாக, அங்கு ஒரு மேசையருகில் இரண்டு பெண்கள் அமர்ந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள் என நினைக்கிறேன்,” என நான் கூறினேன். அவர் என்னைப்பார்த்து நகைத்தார்.

பின்பு நாங்கள் இருவரும் கீழே உணவுச் சாலைக்குச் சென்றோம். அங்கு மூலையில் பியானோ இருக்கவில்லை. அதற்குப் பதிலாக அங்கு இரு பெண்கள் ஒரு மேசையருகில் அமர்ந்திருந்தனர். தன் சொந்தக் கண்களாலேயே


www.aanmeegamalar.com







மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

116
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர்
அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

தான் ஏமாற்றப்பட்டதைக் கடைசியில் அவர் புரிந்து கொண்டார். (சூட்சும ரீதியாகப் பயணம் செய்ய யாரால் முடியும் என்பதை குருதேவர் விளக்குகிறார்: “ஒருவர் ஆழ்ந்த சமாதி நிலையை அடைந்தால் மட்டுமே உணர்வுடன் கூடிய சூட்சுமப்பிரயானம் சாத்தியப்படுகின்றது. இந்நிலையில் உணர்வு நிலையானது, அனைத்தையும் காணும் ஆன்மீகக் கண்ணின் உயர் உணர்வு அறிவு நிலைக்கு விரிவடைகிறது, ஆன்மீகக் கண்ணின் மூலம் இவ்வுலகிலோ அல்லது சூட்சும உலகிலோ உள்ள எந்த ஒரு குறிப்பிட்ட இடத்தையும் கண்டு அங்கு தன் உணர்வு நிலையை செலுத்த முடியும். போதிய அளவு முன்னேற்றமடைந்துள்ள ஒருவர் தனது சூட்சும அல்லது ஸ்தூல உடலையோகூட எங்கு வேண்டுமானாலும் உருவகப்படுத்த முடியும். இது ஈரிட இருப்பு என்றழைக்கப்படுகிறது. இந்த சூட்சும சமாதிநிலையில் சுவாசமும் இதயத்துடிப்பும் அடங்கி, உடல் அசைவற்று பரவசம் போன்ற நிலையில் உள்ளது. நிர்விகல்ப சமாதியாகிய மிக உயர்ந்த நிலையை ஒரு மகான் எய்தியிருந்தால் மட்டுமே அவர் தெய்வீகப் பரமானந்தத்தில் அகமுகமாக இருக்கும் அதே சமயம் அவருடைய ஸ்தூல உடல் சாதாரண முறையில் தொடர்ந்து செயல்படமுடியும்.”)

குருதேவர் தொடர்கிறார்: “நான் அடிக்கடி ஐரோப்பாவில் நடைபெறும் போரின் நிகழ்வுகளை அது சூட்சுமக் காட்சியில் காண்பதுண்டு. ஆனால் அது ஒரு திரைப்படக்காட்சியைப்போன்று தோன்றுகிறது. உலகம் நம்மை மகிழ்விப்பதற்காகத்தானே தவிர, சித்திரவதை செய்வதற்கல்ல. இறைவன், படைப்பு என்ற தனது திரைப்படத்தை மிகவும் சிக்கலுள்ளதாக, நல்லவை மற்றும் தீயவை ஆகிய பேதங்கள் நிறைந்ததாக ஆக்கியுள்ளான். ஒரு திரைபடத்திற்கு நீங்கள் செல்லும்போது அனேக விறுவிறுப்பான காட்சிகளைப் பார்க்க விரும்புகிறீர்கள். ஒரு கொலைமர்மத்தைப் பற்றிய திரைப்படத்தைக் காண்பதற்கு எத்தனைமுறை சென்றிருக்கிறீர்கள் என எண்ணிப்பாருங்கள். திரைப்படம் முடிவுற்றதும் உங்களுக்கு நீங்களே கூறிக்கொண்டீர்கள், “அது ஒரு நல்ல படம்.” வாழ்க்கை என்னும் இத்திரைப்படத்தையும் அதே பற்றற்ற உணர்வுடனும் மகிழ்ச்சியுடனும் காணக் கற்றுக்கொள்ளுங்கள்.”

“நாம் இப்பொழுது ஒரு மானிட தேகத்தில் அடைப்பட்டுள்ளோம் மற்றும் இரவிலும், நாம் இறக்கும்போதும், நாம் ஆவிகள் ஆகிறோம் என்ற உண்மையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஒரு பாடம் உள்ளது. நமது ஆவித்தன்மையை, கண்ணுக்குப்புலப்படாத நமது சக்திவாய்ந்த தன்மையைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள கற்க வேண்டும். ஆனால் எப்பொழுதும், “எனக்குத் தலைவலி, எனக்கு அது அல்லது இது தேவை, எனக்குப் பசலைக் கீரை பிடிக்காது”, என்று உங்களுடைய தேகத்தின் மீதே கவனம் செலுத்திக் கொண்டிருந்தால், நீங்கள் அவ்வாறு செய்ய முடியாது. லௌகீகக் கவலைகளில் ஆழ்ந்திருப்பதைத்தான் நீங்கள் வெல்ல வேண்டும். இதை நீங்கள் எப்படிச் செய்வீர்கள்? இறைவனை உங்கள் வாழ்க்கையின் முதல் சிந்தனையாக ஆக்குங்கள். அவனை நீங்கள் இரண்டாவது இடத்தில் வைத்திருக்கும் வரையில் அவன் உங்களிடம் வரமாட்டான். பொன், மது, சிற்றின்பம் ஆகியவை இவ்வுலகத்துடன் உங்களைப் பிணைப்பதற்காக உருவாக்கப்பட்டன. அவன் அன்பைவிட மேலாக இவற்றை நீங்கள் விரும்புகிறீர்களா எனப் பார்ப்பதற்கு இவற்றை சோதனைகளாக இறைவன் பயன்படுத்துகிறான்,” என்று அன்பு குருதேவர் ஆணித்தரமாகக் கூறுகிறார். மேலே கூறப்பட்டுள்ள அன்புமிக்க

www.aanmeegamalar.com

குருதேவருடைய போதனைகளுக்கு, பகவான் கிருஷ்ணன் பகவத் கீதையில் கூறுவதாவது:

“இதம் சரீரம் கௌந்தேய
க்ஷேத்ரமித்யபிதீயதே
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு:
க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:
குந்தீபுத்திரனான ஹே
அர்ஜுனா! இந்த சரீரத்தை

க்ஷேத்ரமென்றும், இந்த சரீரத்தை அறிகின்றவரும் அனுபவிக்கின்றவருமான நபரை க்ஷேத்ரஜ்ஞன் என்றும் அறிவுடையோர் கூறுகின்றனர். இதுதான் இந்த ஸ்லோகத்தின் பொருள். ‘இந்த சரீரம்’ என்று குறிப்பிட்டுக் கூறுவதனால் ஜீவனின் முக்கிய உபாதி சூட்சும சரீரம் ஆனாலும் ஸதூல சரீரத்தைத்தான் முதலில் நிரூபிக்கிறது என்று போதிக்க வேண்டியுள்ளது. க்ஷேத்ரமென்ற சப்தம்தான் ஸ்தூல சரீரத்தின் நிரூபணமாகக் கூறப்பட்டுள்ளது. க்ஷேத்ரமென்ற வார்த்தைக்கு இறைவனின் வசிப்பிடம் அல்லது இறைபூஜைக்குள்ள இடமென்றும் பயிரிடும் இடமென்றும் இருபொருள் உள்ளதாகக் கூறுகின்றனர். சரீரம் இறைபூஜைக்குரிய இடமும் இறைவனின் வசிப்பிடமும் கர்மத்தைப்பயிரிடக்கூடிய இடமும் ஆகின்றது. இறைபூஜைக்கு பயன்படுத்துபவர்களின் கர்மநாசத்திற்கும் உலக விஷயங்களுக்குப் பயன்படுத்துபவர்களின் கர்மத்தை அதிகரிப்பதற்கும் காரணமாகிறது சரீரம். எந்த ஒரு சரீரத்தால் யோகிகள் மோட்சத்தை அடைகிறார்களோ, அதே சரீரத்தால் யோகிஎல்லாதோர் அதாவது சாதாரண மனிதர்கள் பல யோனிகளில் அநேக ஜன்மங்களுக்குத் தேவையான



குருப்ரியா

கர்மபரம்பரைகளையும் வளர்த்துகின்றனர். சரீரத்தின் உற்பத்தி, அதை நிலை நிறுத்தல் மற்றும் அதன் அழிவிற்கும் மூலகாரணம் கர்மவாசனைகளே. கர்மம் காரணமாக சரீரம் உற்பத்தியாகி கர்மத்தில் நிலை நிறுத்தி, கர்மத்திலேயே அழிவதுதான் சரீரத்தின் இயல்பு. அதனால் கர்மம் அதிகரிக்கும்தோறும் அதனதன் பலன்களை அனுபவிப்பதற்காக ஜீவன் பல சரீரங்களை எடுக்க வேண்டியுள்ளது. கர்மம் அழிந்தால் பின்னர் சரீரம் உற்பத்தியாகாது. அப்பொழுது ஜீவனுடைய ஸம்சாரத்திலுள்ள ஈர்ப்பு முடிவுற்று மோட்சப்ராப்தி உண்டாகிறது. விருப்பு வெறுப்பு இருமை தன்மையுடன் உலக விஷயங்களை மிகுந்த பற்றுடன் ஏற்பதால் கர்மங்களின் வளர்ச்சியும், தீவிர வைராக்கியத்தால் எல்லாவற்றிலிருந்தும் விடுதலையாகி இறைவனிடத்தில் சரணடைந்து, இறை நினைவால் ப்ரம்மநிஷ்டையில் வாழ்ந்தால் கர்மத்திற்குத் தீர்வு ஏற்படும். கர்மத்தைத் தீர்ப்பதற்கு தியாகியாகத்தான் வாழவேண்டுமே தவிர, விஷயங்களை அனுபவிப்பதற்காக அல்ல. “(பகவத் கீதை அத்13 ஸ்லோகம் 1)

பகவத்கீதை அத்13 ஸ்லோகம் 1ல் கண்டவாறு ஒரு மனிதன் வாழ்வானேயானால், இக்கட்டுரையில் குருதேவர் கூறும் விஷயங்கள் நிச்சயம் அவனுக்கு நல்லதும், ஓர் உன்னதமானதும், மகத்தானதுமான விளக்கமாக அல்லது விடையாக அமைந்துள்ளது என்பதில் துளியும் ஐயமில்லை என்பதுதான் எனது கருத்து.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

# இயற்கை மருத்துவம்

❖ முசுமுசுக்கை இலையை வெங்காயத்துடன் நெய் விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்து சாப்பிட்டு வர ஆஸ்துமா, மூச்சு திணறல் குணமாகும்.

❖ மந்தாரை இலையுடன் கொத்தமல்லி, இஞ்சி, உளுந்து, உப்பு, புளி, மிளகாய் சேர்த்து வதக்கி துவையலாக சாப்பிட்டு வர வாந்தி நிற்கும்.

❖ அரசமரக்கொழுந்து, ஆலமரக்கொழுந்து, அத்திமரக்கொழுந்து மூன்றையும் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்து சாப்பிட இரத்த மலப்போக்கு நிற்கும்.

❖ விளாம்பழம் தொடர்ந்து சாப்பிட கல்லீரல் நோய் குணமாகும்.

❖ வெள்ளரிப்பிஞ்சு இருதய நோய்களை குணப்படுத்தும் தன்மையுடையது.

❖ பழைய புளி, சுண்ணாம்பு சேர்த்து பிசைந்து தேனீ கொட்டிய இடத்தில் ஒட்டி வைத்தால் வலி குணமாகும்.

❖ இரவில் தலையணையில் செம்பருத்தி இலைகளை வைத்து படுத்து வந்தால் தலைப்பேன்கள் ஒழியும்.

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# கடவுள் நம்பிக்கையும் வழிபாடும்

அண்டம் முழுவதையும் படைத்துக் காக்கும் கடவுள், எல்லாச் சக்திகளும் பொருந்தியவர். பிறப்பு – இறப்பு, இரவு – பகல், இன்பம் – துன்பம் போன்ற உலக வாழ்வியலில் தொடர்புடைய அனைத்தையும் கடந்து ஏகாந்தம் என்று கூறப் படும் மறைபொருளாக இருப்பவர்.

அன்பு, புனிதம், கருணை என்பதன் மறுபொருள் கடவுள். பிரபஞ்சத்தின் படைப்பாளராகவும் பாது காவலராகவும் பிரபஞ்சமாகவும் இருப்பவர் கடவுள். இத்தகைய கடவுளை அறிவதற்காக ஒவ்வொரு ஆன்மாவும் பயணிக்கும் வழியே மதங்கள். இந்த மதங்கள் ஒவ்வொன்றும் தாங்கள் கற்றறிந்த ஆன்மீக அறிவுக்கு ஏற்ப கடவுள் பற்றி பல்வேறு விதமாக விளக்குகின்றன.

இந்து சமயத்தவர் கடவுளைப் பல உருவங் களிலும் பெயர்களிலும் வணங்குகின்றனர். இவ்வாறு வணங்கப்படும் இந்துக் கடவுள்கள் காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் பல வேறுபாடுகளுடன் காணப்படினும், இவை அனைத்தையும் ஒரே நெறிக்குள் இந்து சமயம் அடக்கி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சமண சமயத்தவர்கள், மனித ஆன்மாவே கடவுள். மனித ஆன்மாவைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற நம்பிக்கைக் கொண் டவர்கள்.

பௌத்த சமயத்தவரோ கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையில் வாழ்பவர்கள். அனைத்தையும் உருவகிக்கும், நிர்வகிக்கும் ஓர் உயரிய சக்தி உண்டு என்ற நம்பிக்கை இவர் களுக்கு இல்லை என்றாலும், தேவர்கள் என்ற ஓர் இனம் உண்டு என்பதிலும், அவர்களும் கர்ம வினைகளுக்குக் கட்டுப்பட்டவர்களே என்பதிலும் நம்பிக்கை கொண்டவர்கள்.

இவ்வாறு ஒவ்வொரு மதத்தவரும் கடவுள் குறித்த பல்வேறு கொள்கையைக் கொண்ட வர்களாக இருப்பினும் இவர்கள் அனைவரும் சென்றடையும் இடம் வீடுபேறு என்ற ஒரே இடம்தான் என்பதில் துளியும் ஐயமில்லை.

இயற்கைச் சக்திகளைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்திவந்த ஆரம்பகால மனிதர்களிடம் கடவுள் நம்பிக் கையானது பயத் தின் காரணமாகவே தோன்றியது. பலவகையான விலங்கு களை வேட்டையாடி விலங்குகளின் ரத்தத்தை மட்டுமே கண்டுவந்த மனிதனுக்கு ஒரு மரக்கிளைப் பட்டு அவன் முகத்தில் குருதி வடியவே, முதன்முதலில் வலியை உணர்கிறான். அப்போதுதான் குருதியை முதன்முதலில் பார்க்கிறான். அன்று முதல் பயந்து மரத்தினை வழிபடலாயினான். அதையே நாம் காலப்போக்கில் கந்து வழிபாடு (மரவழிபாடு) என்கி றோம்.

தன்னைவிட ஆற்றல் படைத்த சக்திகளால் தனக்குத் தீங்கு ஏற்பட்டு விடக் கூடாது என்ற



அச்சத்தின் காரணமாக ஆரம்பக்காலத்தில் மனிதனிடம் தோன்றிய கடவுள்; நம்பிக்கை, காலப்போக்கில் பண்பட்ட நிலையினை அடைந்து, தெளிந்த ஆன்மீகத்தில் தன்னுடைய வாழ்க்கை முழுதும் செலுத்தி இன்பம் அடையும் உயரிய நிலையை இன்று அடைந்துள்ளது.

மனிதனுடைய வாழ்க்கையை நன்னெறியில் செலுத்தப் பயன்படுவதே பக்தி. இந்தப் பக்தியி னால் அறம், அன்பு, இரக்கம் என்னும் நல்லுணர் வுக் கூறுகள் மனிதனிடம் மிகுந்துக் காணப்படும்.

இந்தப் பக்தியானது பக்தர்களின் மன நிலையைப் பொறுத்து அன்புமார்க்கம், அறிவு மார்க்கம் என்ற இரண்டு வகைகளில் மேற் கொள்ளப்பட்டுவருகின்றது.

அன்பு மார்க்கம் என்பது படித்தவர், படிக்காதவர் என்று அனைவரும் கடவுளை வழிபடும் எளிய மார்க்கம். தன்னைச் சார்ந்தவர்களோடு அன்பு செலுத்துவதிலேயே கடவுளைக் காண்பது இம்மார்க்கம். தான் விரும்பிய இறைவனை வழிபட எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன்னுடைய மனதினை மட்டும் சாட்சியாக வைத்து வழிபடும் இந்த அன்பு மார்க்கத்தில் இறைவனுக்குப் படைக்கப்படும் பொருளை முதலில் பக்தன் சுவைத்து, அதில் சிறந்தது எது என்பதை எடுத்து

இறைவனுக்குப் படைப்பான். இத்தகைய அன்புவழி மார்க்கத்தை மேற்கொண்டுதான் இறை வனுடைய அன்பைக் கண்ணப்பர் பெற்றுள்ளார் என்பதை சேக்கிழாரும்,

“கொழுவிய தசைகள் எல்லாம்
கோலினில் தெரிந்து கோர்த்து அங்கு
..............
அமுது செய்து அருளும் என்றார்”

என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,

“செங்கண் வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்க மூன்று அடுக்கு நாக
அங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க என்ற”

என்ற பாடல் வரிகளிலும் உணர்த் துகின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்தில் வழி பட்ட கண்ணப்பரைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்ட தன்மையினை, அரு சோமசந்தரம் அவர்கள்,


ப.கற்பகராமன்

“திண்ணன் பகலில் வேட்டையாடியும் இரவில் காவல் காத்தும் பொழுதுபோக்கினான். சிவகோசி யார் நாள்தோறும் இறைவன் சந்நிதியில் இறைச்சிக் கிடக்கக்கண்டு தூய்மை செய்துவந்தார். அவ ருக்கு ஒன்றும் புரியவில்லை. ஐந்தாம்நாள்இரவு, சிவபெருமான் சிவகோசியார் கனவில் தோன்றி, அப்பனே, அவனை வேடனென்று எண்ணாதே. அவன் அன்புக்கு எல்லையில்லை. அவன் மெய் யறிவும் இனிய செயலும் கொண்ட அன்புருவம்.

நீ சூடிய பூக்களை அவன் காலால் நீக்குவான். அவன் காலடி நமக்கு முருகனின் காலடியிலும் கனிவு தருகிறது. அவன் உமிழும் மஞ்சன நீர் கங்கையிலும் தூயது. அவன் தலைமயிரில் சொருகிவரும் பூ பிரம்மா, திருமால் சாத்தும் பூக்களிலும் புண்ணியமானது. அவன் சுவைத்துப் பார்த்து அளிக்கும் இறைச்சி அவியுணவினும் அரியது. அவன் பேசும் சொற்கள் வேதங்களினும் விழுமியன. அனைத்திற்கும் காரணம் அவனது தூய அன்பே ஆகும். அதனை நீ நாளைநம் பக்கத் தில் மறைந்திருந்து பார்” என்று விளக்குகின்றார்.

அறிவு மார்க்கம் என்பதோ பலவகையானமந்தி ரங்கள்கூறி, முறையான அபிஷேகம்,அர்ச்சனைகள் முதலியன செய்து ஆகம விதிப்படிஇறைவனை வணங்குவதாகும். இந்த அறிவுமார்க்கத்தில் பலவகையான யாகங்கள் செய்து ஆகாயத் தில் இருக்கும் இறைவனைப் பஞ்ச பூதங்களின் வழி இறக்கி அருள்பெற்று மகிழ்வர்.

இதில் இறைவனுக்குப் படைக்கப்படும் நைவேத் தியங்களை முகந்துப் பார்க்கக்கூடக் கூடாது. இத்தகைய அறிவு வழியான பக்திமார்க்கத்தை மேற்கொண்டு இறைவனின் திருவருளைப் பெற்ற வர் சிவகோசியார் என்பதை,

“பழுது புகுந் தது தீரப்
பவித்திரமாம் செயல்புரிந்து
....................
முழுது முறைமையின் முடித்து
முதல்வனார் கழல் பணிந்தார்”

என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,

“பணிந்தெழுந்து தனி முதலாம்
பரனென்று பல்முறையால்
துணிந்த மறை மொழியாலே
துதி செய்து சுடர்த் திங்கள்
..............
தபோ வனத்தின்இடை சார்ந்தார்”

என்ற பாடல் வரிகளிலும் சேக்கிழார் விளக்கு கின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்திலும்



அறிவு மார்க்கத்திலும் இறைவனின்மேல் செலுத்தும் பக்தி, தீமைக்கு அஞ்சி நன்மைபுரிந்துவாழவேண்டும் என்ற எண்ணத்தை மனிதர்களிடம் ஏற்படுத்துகின்றது.

பரந்து விரிந்துள்ளஇந்த உலகில் மனிதன் சிறந்த வாழ்க்கையை இன்பமாக வாழ்வதற்கு அவனிடம் உள்ள இந்தப் பக்தியே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனின் திருவடியை அடைவதற்காகவே நாம் அனைவரும் பிறவி எடுத்துள்ளோம். ஆனால் அந்தத் திருவடியைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நம்முடைய முக்கியக் கடமை. உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்குக் கல்வியும் தேவைப்படுவதைப் போல ஆன்மா நயப்படவதற்குக் கடவுள் வழிபாடு அவசியம் தேவையாகும். நாம் செய்யும் தொழிலுக்குக் கருவியாக இருப்பது உடம்பு. பொருட்களின் தன்மையை நாம் சரியாக அறிந்துகொள்ள கருவியாக இருப்பது மனம். அனால் இந்த உடம்பும், மனமும் ஆன்மாவின் கருவிகள். எனவே உடம்பை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியைவிடவும், மனதை நயப்படுத்து வதற்கு வேண்டிய கல்வியைவிடவும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய வழிபாடு.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதில் நமக்கு உறுதியான பற்று உண்டாவது போல கடவுளினிடத்தில் சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அன்புக்கு உரியவனாகிறான்.

இத்தகைய இறைவழிபாடு என்பது உலகில் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும்புனிதமான செயலாகும். இந்த இறை வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய சந்ததியினரும் குறைவுபடாத செல்வச் செழிப்போடு வாழ்வார்கள் என்பதைத் தொல்காப்பியர்,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ"

என்ற நூற்பா வழி சுட்டுகின்றார்.

இறைவனுடைய அருளைப் பெருவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த வழிபாடு, தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாடு, பிறர் பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாடு என்று இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாட்டால் தனிமனித ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. எப்படி என்றால் இடக்கை மணியடிக்க, வலக்கை மலர் தூவுகிறது. வாய் மந்திரங்களைக் கூற, உள்ளம் இறைவனுடன் ஒன்றி நிற்கிறது. இதே போன்று பிறர்பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாட்டிலும் கூட்டுணர்ச்சி உண்டாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனை வழிபடுவதினால் தனிமனித வழிபாடும் மக்கள் ஒருமைப்பாடும் ஏற்படுவதைப் போலவே, இயற்கை ஒருமைப்பாடும் உண்டாகின்றது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. மத்தளத்தைத் சூடுபடுத்துவதனால் நெருப்புடனும், சங்கு நீரிலிருந்து எடுப்பதனால் நீருடனும், மணி உலோகத்திலும் (நிலத்திலிருந்து எடுக்கப்படுவது), குழல் காற்றுடன் தொடர்பு கொள்வதாலும் ஓதும் மந்திரம் அண்ட வெளியெங்கும் கேட்பதாலும் பஞ்ச பூதங்களும் இறை வழிபாட்டினால் தூய்மை அடைவதுடன் ஒற்றுமையும் அடைகின்றன.

பஞ்ச பூதங்களைப் போலவே இறைவனின் திருமேனியைக் காண்பதால் கண்ணும், அவருடைய திருப்புகழைக் கேட்பதினால் காதுகளும், அவற்றை ஓதுவதால் வாயும், நறுமணப் புகையை நுகருவதால் மூக்கும், திருமேனியை வலம் வந்து தொழுவதால் கைகளும், கால்களும் அவற்றிற்குரிய படைப்பின் பயனை அடைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இறை வழிபாட்டினால் தனிமனிதனுடைய வாழ்க்கையும், மனித இனத்தினுடைய ஒட்டு மொத்த வாழ்க்கையும், இயற்கையின் தொழிலும் என அனைத்தும் ஒருமைப்பாடு அடைகின்றன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனவே மனத்தூய்மையுடன் பக்தி செழுத்தி, முறையான வழிபாடுகளை மேற்கொண்டு இறைநிலையோடு இணைந்து இன்பமாக வாழ்வோம்.

– முனைவர் ப. கற்பகராமன்
MA.,MA.,MA.,M.Phil.,P.hD
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி

www.aanmeegamalar.com

# நொய்டா முருகன் கோவிலில் நடைபெற்ற நவராத்திரி விழா






புதுதில்லி நொய்டாவில் அமைந்துள்ள வேத பிரச்சார சனஸ்தான் கோயில்களில் நவராத்திரி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

நொய்டா வேதபிரச்சார சன்ஸ்தான் செக்டர் 62–ல் நிர்வகித்து வரும் ஸ்ரீ விநாயகர் ஸ்ரீ கார்த்திகேயர் கோயிலில் நான்காவது ஆண்டாக தொடர்ந்து கொலு வைக்கப்பட்டது.

வழக்கமான அஷ்டலட்சுமி, தசாவதாரம், ஸ்ரீ மகா விஷ்ணு, ஸ்ரீ வெங்கடேஸ்வரர், ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ கார்த்திகேயர், ஸ்ரீ துர்க்கை, ஸ்ரீஹனுமான், கல்யாண வைப பொம்மைகள், விளக்கு பூஜை பொம்மை. ஐபிஎல் கிரிக்கெட்டை நினைவு கூரும் கிரிக்கெட் வீரவீர்கள் பொம்மைகளும் இடம் பெறும் ஆனால் இந்த ஆண்டு நடைபெற்ற கொலுவில், கோவிட் தொடர்பான பொருட்கள் இடம் பெற்றிருந்தது சிறப்பு.

இந்த கொலுவுக்காக வேத பிரச்சர சன்ஸ்தான இரண்டு முறை விருதினையும், பதக்கமும் சான்றிதழும் பெற்றுள்ளது.

நவராத்திரி திருவிழாவை ஒட்டி, நாள்தோறும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் செய்யப்பட்டு, மகாதீபாராதனை காட்டப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

வண்ணமயமான இந்த கொலு ஏற்பாடுகளை ரேணுகா ராமசேஷன், பிரியா ராஜு ஐயர், சுஜாதா கோபால், மைதிலி ராமன், நீலா ராஜேந்திரன், ஜானகி, விஜயா மோகன், புவனா ராதாகிருஷ்ணன், லட்சுமி ரவி ஆகியார் செய்திருந்தனர். கொலுவின் போது பெண்களும் குழந்தைகளும் தேவி கீர்த்தனைகளைப் பாடினர்.

இணையதள ஈடுபாடு போன்ற காரணங்களாலும், பலர் சிறிய பிளாட்களில் வசிப்பதால் போதி இட வசதி இல்லாத காரணத்தாலும் தென் இந்திய கலாச்சார பாரம்பரியத்தில் ஒரு அங்கமான கொலுவுக்கு தற்போதைய இளைய தலைமுறையினரிடம்

ஆர்வம்குறைந்து வருகிறது; கொலு வைக்கும் வழக்கமும் மறைந்துவருகிறது.

இதனால் இப்படி கோயில்களில் வைக்கப்படும் கொலு போன்ற நிகழ்வுகளுக்கு தங்கள் குழந்தைகளையும் பெற் றோர் அழைத்து வர வேண்டும் என்று கோயில் நிர்வாக விடுத்த வேண்டுகோளை ஏற்று பொதுமக்கள் திரளாக கொலுவில் கலந்து கொண்டனர்.



எஸ்.வெங்கடேசன்

புதுதில்லியில் முருகருக்கு முக்கியத்துவம் தரும்விதத்தில் இத்திருக்கோவில் அமைந்திருப்பதால் புதுதில்லி வாழ் தமிழர்கள் திரளாக கலந்து கொண்டு முருகனை வழிபடுவதுடன், 11 ஆவது ஆண்டாக பிரதோஷ பூஜையிலும் கலந்து கொண்டு வருகின்றனர். பிரதோஷ விழாவை ஜெகதீசன் குருக்கள் துணையுடன் ஸ்ரீராம் வாத்தியார் சிறப்பாக செய்து வருகின்றனர்.

நவராத்திரி பூஜை ஏற்பாடுகளும் வாத்தியார் சங்கர், வாத்தியார் ஸ்ரீராம் மேற்பார்வையில் மணிகண்டன் சர்மா உதவியுடன் செய்யப்பட்டன.

நொய்டா நிர்வாகம் கட்டுப்பாடுகளை தளர்த்தியதைத் தொடர்ந்து, 2 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற பொது நிகழ்வு இது. இருப்பினும் கோவிட் நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டன.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370

# தன்வந்திரி பெருமான் தேவராக மாறிய வரலாறு




தேவர்களும் அசுரர்களும் பாற் கடலை கடைந்தபோது அதில் இருந்து கையில் அமிர்த கலசத்துடன் தோன்றிய தன்வந்திரி மஹாவிஷ்ணுவை வணங்கினார். தேவர்கள் அவரை "அப்சா" என அழைத்தனர். தேவர்களுக்கு இணையாக தனக்கும் அமிர்தத்தில் பங்கு தரும்படி கேட்டார். "நீ தேவர்கள் அவதரித்த வெகு காலத்திற்குப் பின்னரே பிறந்தாய். உன்னை தேவர்களுக்கு இணையாக கருத முடியாது. நீ என்னுடைய அவதாரமாக பூமியில் பிறக்கும் போது தேவர்களில் ஒருவர் என்னும் அந்தஸ்தை அடைவாய்.

ஆயுர்வேத சிகிச்சையில் சிறந்து விளங்கி, ஆயுர்வேதத்தின் அதிபதியாக விளங்குவாய்" எனச் சொல்லி மறைந்தார். அதன்படி காசிப முனிவரின் மகனாகப் பிறந்தார். இவர் வைகாசி மாதம் தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன் அதாவது திரியோதசி அன்று அவதரித்தார். அன்றைய நாளை தன்வந்திரி ஜயந்தி என வடநாட்டில் கொண்டாடுகின்றனர். ஆயுர்வேத மருத்துவக் கலையில் இயற்கையிலே சிறந்து விளங்கி பற்பல நோய்க்கும் மருந்து கண்டுபிடித்து உலகிற்கு அருளினார். இவர் மலர்ந்த முகத்துடன் பின்னிரு கைகளில் சங்கு சக்கரம் ஏந்தியும், முன்னிரு கைகளில் அட்டைப்பூச்சியும், அமிர்த கலசமும் கொண்டு காட்சி அளிக்கிறார். கேரளாவில் மருதூர் வட்டம் சேர்தலாவில் தன்வந்திரி கோவில் உள்ளது. வட்டவடிவ சந்நிதியில் மேற்கு நோக்கி நின்றவாறு அருள்பாலிக்கிறார். இவருக்கு தினமும் மோர்குழம்பும் கீரைக்கூட்டும் நிவேதனமாகப் படைக்கப் படுகிறது. தீராத வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் இத் தலம் வந்து இங்கு தரப்படும் பிரசாதம் சாப்பிட்டாலே போதும், குணம் அடைகின்றனர்.

# தத்துவ நூல்கள் தோன்றியதன் அவசியம்

மதம் என்றால் என்ன?
கடவுள் இருக்கிறான் என்ற நம்பிக் கையை வலியுறுத்துகின்ற கருத்தே அது. உலகில் எப்பொழுதும் நிரந்தரமாய் இருக்கின்ற அக்கருத்து மனித ஆற்றலைக் காட்டிலும் பெரிய ஆற்றலைக் கொண்டது. அதுவே தனது பெரிய ஆற்றலை வைத்து கொண்டு உலகில் உள்ள உயிர்களை நிரந்தரமாய் அற்புதமாய் ஆட்சி செய்கிறது. அதனால் உயிரும் உணர்ச்சியும் உள்ள சமுதாயம் அந்த சக்தியை நினைக்க வேண்டும், தொழ வேண்டும் என்று சொல்லுவதே மதம்.

❖❖❖

உலகிற்கு இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கின்றனவா? கடவுள் என்பது ஒரு தனிப்பொருளா? அதாவது பரம்பொருளா? அல்லது அசைக்க முடியாத ஒரு பெரிய கொள்கையா? கடவுளை இத்தகைய கொள்கையாக உற்பத்தி செய்தது அல்லது செய்து காட்டியது உலகிலுள்ள மேல்நிலை சிந்தனை வர்க்கமா? இல்லை என்றால் இச்சிந்தனையைச் செய்த சிந்தனையாளர்களே கடவுளா? இதைத்தவிர வேறு ஏதாவது விளக்கங்கள் உண்டா? முதலில் இதைக் கேட்டுக் கொள். மனிதனை மேலும் மேலும் மறுபடியும் மறுபடி யும் சிந்திக்க வைக்கும் முதலில் வரும் கொள்கையே கடவுள். உதாரணம் யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே, இதுபோல எனலாம்.

❖❖❖

தாங்கள் சொல்வதுதான் நிலை என்றால் பரம்பொருள் என்ற ஒரு பொருள் உருவானதை விளக்குவதற்கு ஒரு உறுதியான மூலவிளக்க அறிவுநூல்கள் இருக்குமே அல்லது அறிவு இருக்குமே. இவ்வண்ணம் உண்மையை உணர ஒரு மூலஅறிவு இருக்குமே. ஆனால் உலகமும் அங்குள்ள பல மதங்களும் மாறுபட்ட விதவிதமான ஆயிரம் தத்துவநூல்களை உருவாக்குவானேன் தத்துவநூல்கள் வித்தியாசப்படுவதின் நோக்கம் என்ன என்பதே என் கேள்வி.

❖❖❖

கடவுளைப் பற்றிய பல எண்ணங்கள் இருக்கின்றன. அவற்றில் சிற்சில பிரபஞ்சத்தில் உள்ள கண்பார்வைக்கு எட்டக்கூடிய பஞ்சபூதங்களையே கடவுள் என்று சொல்லுகின்றன. வேறு சில அப்படி சொல்லவில்லை. உலகையே ஆட்டிப்படைக்கின்ற பஞ்சபூதங்கள் வெளிப்படுத்துகின்ற சக்திதான் கடவுள் என்றும் சொல்லாமல் இருக்கின்றன. இவ்வண்ணம் உலகில் கடவுளும் கடவுளின் தத்துவமும் திண்டாடுகின்றது. அதனால் பல தத்துவ நூல்கள் தோன்றின.

❖❖❖



உண்மையில் தத்துவநூல்களில் உதவி என்ன? சில சிந்தனையாளர்கள் கருத்தாக சொல்வதெல்லாம் இந்நூல்களெல்லாம் பிரமிக்கும்படியான பல வார்த்தைகளைக் கொண்ட நூல்களே என்கிறார்கள். பிரமிக்கத்தக்க உதாரணங்களும், அழகான வார்த்தைக் கோர்வைகளும் உடனே எடுத்துக் கொள்ள கூடிய உபயோகமான உதாரணக் கவிதைகளாகவும் இவைகள் இருக்கின்றன. இதுபோன்ற கவிதைகள் சாதாரணக் கவிதைக் கோர்வையிலும் இலக்கியத்திலும் இருந்து கொண்டு மக்களுக்கு

உதவி செய்கின்றன. வேறு ஒரு நிலையில் பார்த்தால் கடவுளைப் பற்றிக் கூறாத இலக்கியங்களும் கவிதைகளும் இயற்கைதான் கடவுள் என்று நெறிப்படுத்தி வலியுறுத் தியதும் இல்லை. இதனிடையில் தத்துவ நூல்கள் ஒன்றே தனிமையாய் கடவுளை எடுத்துச் சொல்லுகிறது விளக்குகிறது. இந்தவகையில் இது தனியானதே வேறானதே.

❖❖❖

உலகில் இன்றுவரை சில மதங்கள் நிலவி வருகின்றன. புத்தமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமிய மதம், இந்துமதம் போன்றவை களும் பிறமதங்களும் சிறப்பானவைகளே. இவையனைத்தும் மனிதர் களுக்கு உபயோகமாக இருக்கிறது. இதில் எந்த மதம் சிறந்தது? எது வரிசைக் கிரமத்தில் முதலிடத்தைப் பிடிக்கிறது? நீங்களோ அல்லது வேறு எவரேனுமோ இம்மதங்களை வரிசைப்படுத்தி சொல்லு வார்களா?

❖❖❖

மேற்கண்ட மதங்களை ஆராய்ந்து படித்து துருவி வரும் பொழுது முறைப்படுத்துகின்ற இம்முறை சிந்தனை நியாயமானதாக இருக்கும். சாதாரண உலகிற்கும் கல்வி உலகிற்கும் இது தேவை. ஒரு மதவாதிக்கு எது மேல் கீழ் என்பது தேவையில்லை. ஒவ்வொரு மதமும் தனக்கென்று ஒரு பாதையையும் உண்மையை உணரும் வழியையும் தனித்தனியாக வைத்துக் கொண்டிருக்கின்றன.

❖❖❖

இந்துமதம் உட்பட உலகமதங்களுடன் புத்தமதம் எப்படி முழுமையாக வேறுபடுகிறது? முதலில் தெரிந்து கொள்ளுங்கள். கடவுள் என்ற கொள்கையை அடிப்படையாக கொண்டு புத்தமதம் சிந்திக் கப்படவில்லை. தோற்றுவிக்கப்படவும் இல்லை. அது முழுக்க முழுக்க மனிதனின் சிந்தனையை அடிப்படையாக கொண்டது. புத் என்ற காரணப்பெயர் அதற்கு இதனால் ஏற்பட்டது. ஆச்சரியப்படக்கூடிய பல மதங்களுக்கு மத்தியில் இதுவே புத்த மதத்தின் வேறுபாடு.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

# ஏழையின் அன்னதான ஆசையை நிறைவேற்றிய

# ஸ்ரீ நருசிம்ம ஸரஸ்வதி ஸ்வாமிகள்

'கங்காபுரம் என்ற ஊரில் பாஸ்கரன் என்ற பெயரைக் கொண்ட ஒரு ஏழை வாழ்ந்து வந்தார். அவர் தினமும் கருநெல்லி மரத்தடியில் அமர்ந்து இருக்கும் ஸ்ரீ நருசிம்ம ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் சென்று அவரை நமஸ்கரித்து விட்டு வருவார். அதை அவர் தனது தினசரி வாழ்க்கை முறை யாகவே வைத்துக் கொண்டு இருந்தார்.

ஒரு நாள் அந்த ஊரில் ஒரு பண்டிகை நடந்தது. அப்போது ஸ்ரீ நருசிம்ம ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு உணவு சமைத்து அன்னதானம் தர வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் ஏழ்மை நிலையில் இருந்த அவரிடம் இருந்ததோ மிகக் குறைவான அளவிலான உணவுப் பண்டம் மட்டுமே. அதைக் கொண்டு அவரால் ஐந்து பேருக்குக் கூட அன்னதானம் போட முடியாது. ஆகவே ஸ்வாமிகளுக்கு உணவு எனும் பெயரில் அன்னதானம் தரும் நேரத்தில் இன்னும் சிலர் வந்து விட்டால் என்ன செய்வது?

செல்வந்தர்கள் ஆங்காங்கே அன்னதானம் தந்தவண்ணம் இருந்தார்கள். அங்கெல்லாம் திரளான அளவில் மக்கள் சென்று உணவைப் பெற்றுக் கொண்டார்கள்.

தனக்கும் அன்னதானம் போட ஆசையாக உள்ளது என்றுதனது நண்பர்களிடம் தனது ஆசையை கூறிய போது அவர்கள் அவரை கேலி செய்தார்கள். 'நீயே அன்னதானம் எடுத்து சாப்பிடும் நிலையில் இருக்கிறாய். உனக்கு அன்னதானம் போட வேண்டும் என்ற ஆசை வேறா. முதலில் உன் வயிற்றுப் பிழைப்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்?' என்று கேலி செய்தார்கள்.

அதைக் கேட்ட பாஸ்கருக்கு அவமானமாக இருந்தது. செல்வந்தர்கள் போட்ட அன்னதானத்தில் கூடிய கூடத்தைப் பார்த்தவர் தன்னால் நாலுபேருக்குக் கூட அன்னதானம் முடியாதே என மனம் வருந்தினார். தனது பிராமண நண்பர்களை அது குறித்துக் கேட்டோமே என மனதுக்கு இன்னும் அவமானமாக இருந்தது.

இப்படியாக சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் அவரை வணங்க வந்த ஒரு செல்வந்தர் தான் மறுநாள் ஸ்வாமிகளுக்கும் மற்றவர்களுக்கும் அன்னதானம் தர விரும்புவதாகக் கூறி அதற்கு அவரிடம் அனுமதி கேட்டார். ஆனால் அப்போது அங்கு நின்றிருந்த பாஸ்காரின் எதிரில் ஸ்வாமிகள் கூறினார் 'நாளைக்கு இங்கு நிறைய மக்கள் வருவார்கள் என்பதினால் எங்களுக்கு பாஸ்கர்



அன்னதானம் போடட்டும்’. அதைக் கேட்ட ஏழை பாஸ்கருக்கு என்ன கூறுவது என்று தெரியவில்லை. அப்படியே அதிர்ந்து போனார்.

தன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு உணவு செய்து அதை நாலு பேருக்குக் கூட அன்னதானம்யாக தர இயலாது. ஆனால் ஸ்வாமிகளோ ஒரு கூட்டத்துக்கே அன்னதானம் போடுவார் என்கிறாரே என்ன செய்வது எனப் புரியாமல் குழம்பி நின்றபோது அந்த செல்வந்தரும் அவரைப் பார்த்தார். அவரைப் பார்த்த பார்வையிலேயே, ‘இந்த மனிதனே பவதி பிட்ஷாந்தேகி என்கிறபோது இவர் எங்கிருந்து அன்னதானம்ப் போடுவார் என்று ஸ்வாமிகள் கூறுகிறார்’ என கேலியாக பார்த்த பார்வை பாஸ்கரை மேலும் அவமானப்படுத்தியது போல இருந்தது.

ஆனாலும் வேறு வழி இல்லை. ஸ்வாமிகளிடம் ஒன்றும் கூற முடியாது. ஏன் என்றால் அப்படிக் கூறிய பின் ஸ்வாமிகள் கண்களை மூடிக் கொண்டு தவத்தில் ஆழ்ந்து விட்டார். வீடு திரும்பிய அந்த ஏழை மனைவியிடம் நடந்ததைக் கூற அவளும் வருத்தம் அடைந்தாள். சரி வருவது வரட்டும். நம்மிடம் உள்ளதை கொண்டு போய் முதல் அன்னதானம்யை ஸ்வாமிகளுக்கு போடலாம். அடுத்து எத்தனைபேருக்கு தர முடியுமோ தந்து விட்டு அமைதியாக தலையைக் குனிந்து கொண்டு நிற்கலாம். அனைவர் முன்னாலும் நாம் அவமானப்பட வேண்டும் என ஸ்வாமிகள் நினைத்தால் அதை நம்மால் தடுக்கவா முடியும் என எண்ணியபடி இரவு உறங்கி விட்டார்கள்.

மறுநாள் காலை எழுந்து காலைக் கடன் களைக் கழித்தப் பின் குளித்து விட்டு இருந்த பொருட்களைக் கொண்டு சமையல் செய்தார்கள். நான்கு அல்லது மிஞ்சிப் போனால் ஐந்து பேருக் குக் கூட நிறைவாக இருக்காத அளவு மட்டுமே உணவு இருந்தது.

ஒரு யந்திரம் போல அதை எடுத்துக் கொண்டு ஸ்வாமிகளுக்கு முன்னால் கொண்டு போய் வைத்து அதை நைவித்தியம் செய்தார்கள். அங்கோ ஆயிரக்கணக்கில் அன்னதானம் சாப்பிட வந்திருந்த கூட்டம் அமர்ந்தபடி உணவை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

‘கையில் நான்கு இலைகளுடன் சின்ன பாத்திரத்தில் அந்த ஏழை கொண்டு வந்த உணவு யாருக்கு கிடைக்கப் போகிறது. போச்சடா, இன்று நாம் பட்டினிதான்’ என்று எண்ணிக்கொண்டு

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegam.com
ஆன்மிகம்.காம்




அங்கு கூடி இருந்த கூட்டம் அங்கலாய்த்தது. ஆனால் ஸ்வாமிகள் எதிரில் வந்து நின்றதால் அவர் கூறும்வரை அங்கிருந்து எழுந்து போக முடியாது என்பதினால் அமைதியாக அமர்ந்து இருந்தார்கள்.

முதல் அன்னதானம் ஸ்வாமிகளுக்கு ஏழை பாஸ்கரின் மனைவி தந்தப் பின் அதை ஏற்றுக் கொண்ட ஸ்வாமிகள் இனி வரிசையில் அமர்ந்து உள்ளவர்களுக்கு இலையைப் போட்டு உணவை பரிமாறு என்று ஆணையிட்டார்.

'கையில் உள்ள பாத்திரத்தில் நான்கு கரண்டி உணவும், நான்கு இலைகளுமே கையில் இருக்க இந்த உணவை போட்டால் இரண்டாவது மனிதருக்கே அது போதாமல் இருக்கும்போது ஸ்வாமிகள் இப்படி நம்மை அவமானப்பட வைக்கி றாரே' என அந்த ஏழை தம்பதியினர் மனதில் வருந்திக் கொண்டு பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு இலையை போடத் துவங்கி னார்கள்.

இலையைப் போடப் போட அவள் கையில் இருந்த இலையும் வந்து கொண்டே இருக்க, அவளைத் தொடர்ந்து பாஸ்கரும் பாத்திரத்தில் இருந்த உணவை முதலில் அமர்ந்திருந்தவருக்கு இலை நிறைய போட்டதும், அந்த பாத்திரத்தில் இன்னும் உணவு இருக்க அடுத்தவருக்கு, அடுத்தவருக்கு என உணவைப் பரிமாற்ற பரி மாறிக் கொண்டே போய்க்கொண்டு இருக்க உணவு பாத்திரத்தில் இருந்து உணவு வற்றாமல் வந்து கொண்டே இருந்தது.

அந்த ஏழை தம்பதியினருக்கு மட்டும் அல்ல உணவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் ஒரே ஆச்சர்யம். அந்த தம்பதியினர் கொண்டு வந்த உணவு நான்கு பேர்களுக்குக் கூட போதாது என்று எண்ணியபோது, போதும், போதுமென்ற அளவில் இன்னும், இன்னும் என்று கேட்டு வயிறு முட்ட உண்டவர்கள் மட்டும் அல்ல பாஸ்கர் தம்பதியினரே பேச்சு மூச்சு இல்லாமல் அதிர்ச்சியில் இருந்து அதில் இருந்து மீளவும் முடியாமல் அன்னதானம்யைப் போட்டவண்ணம் இருந்தார்கள்.

அன்னதானம்க்கு ஆயிரக்கணக்கில் மக்கள் வந்தார்கள். வயிறு முட்ட முட்ட அனைவரும் உணவை உண்டார்கள். அந்த அளவு உணவு எங்கிருந்து தன்னுடைய பாத்திரங்களில் நிறம்பி வழிந்து கொண்டே இருந்தது என அந்த தம்பதியினருக்கும் தெரியவில்லை, வந்திருந்த மக்களுக்கும் புரியவில்லை. பாஸ்கர் தம்பதியினர் ஸ்வாமிகள் முன் நின்று 'ஸ்வாமி இதென்ன மாயை என்று எங்களுக்கு விளங்கவில்லை.

உங்களுடைய கருணைக்கு நாங்கள் எப்படி கைம்மாறு செய்யப் போகிறோம் என்று தெரிய வில்லை. நாங்களோ ஏழைகள்' என்று கூற அவர் களை தேற்றினார் ஸ்வாமிகள்.

'பிராமணத் தம்பதியினரே, இனி என் முன் நீங்கள் அமர்ந்து உணவு அருந்திய பின், மீதம் உள்ள உணவை அதோ தெரிகிறதே பீமா நதி, அதில் சென்று போட்டு விடுங்கள்' என்று கூற ஸ்வாமிகள் கூறியபடியே அவர்கள் செய்தார்கள். அன்று அங்கு குறைந்தது நான்காயிரம் அல்லது ஐயாயிரம் மக்கள் உணவு உண்டிருப்பார்கள். அந்த ஊரில் இருந்த அனைவரும் ஸ்வாமியின் மகிமையை பேசிப் பேசி மகிழ்ந்தார்கள்.

## எங்கெல்லாம் சாப்பிடலாம்

'பொதுவாக ஒருவருடைய குருமார்கள் உள்ள இடங்களில் இருந்து வரும் அழைப்புக்கள், சகோதர சகோதரிகளின் வீட்டு வைபவங்கள், தாய் மாமன் வீடுகளில் வைபவம், பிராமணர்கள் வீடுகளின் சடங்குகள் மற்றும் அங்கு நடைபெறும் விழாக்கள், ஆலயங்களில் நடைபெறும் விழாக்கள், தெய்வ காரியங்கள் நடைபெறும் இடங்கள் போன்றவற்றில் இருந்து வரும் சமபந்தி போஜனம் போன்றவற்றை அவசியம் உணவருந்த வேண்டும்.

## எங்கெல்லாம் சாப்பிடகூடாது?

ஆனால் அதே சமயம் அழைப்பவர்கள் இறைவன் மீது நம்பிக்கை இல்லாமல் வாழ்ப வர்கள், பிறரை நம்பாதவர்கள், பிறரை வஞ்சித்து பிழைப்பவர்கள், மிருகங்களை வெட்டி விற்பவர்கள், திருடர்கள், அடகுக் கடை வைத்து அதில் ஆதாயம் காண்பவர்கள், பித்ருக்களுக்கு சிரார்த்தம் செய்யாதவர்கள், மோசடிக்காரர்கள், குருவை உதாசீனப்படுத்துபவர்கள், சாஸ்திரங் களை அனுஷ்டிக்காதவர்கள், குல தெய்வங்களை வழிபடாதவர்கள், வேசிகளின் வீடுகள், வேதங்களை விற்று வாழ்கையை ஓட்டுபவர்கள் போன்றவர்களின் அழைப்பை நிராகரிப்பது உத்தமம். www.aanmeegamalar.com

## உணவை ஏற்க கூடாத முறை

திருவிழா அல்லாத, சடங்குகள் அல்லாத பொதுஜன விருந்து நடைபெறும் இடங்களில் விருந்து உண்பவர்களின் ஆயுட்காலம் குறைந்து போய் விரைவில் முதுமை அடைவார்கள்.

மேலும் மற்றவர்கள் அமர்ந்து உண்ட இடத்தை பசுவின் சாணம் அல்லது மஞ்சள் பொடியைத் தூவி சுத்தம் செய்யாமல் வெறும் ஜலத்தைக் கொண்டு துடைத்த இடத்தில் அமர்ந்து கொண்டு உணவை அருந்துபவனுக்கு அவனுக்கு முன் உண்டவனின் வீட்டில் உள்ள பாபத்தில் ஒரு பங்கு வந்து சேரும்.

முக்கியமாக பௌர்ணமி தினங்களில் இந்த நிலையில் உண்பது முன் பிறவியில் செய்திருந்த அனைத்து நற்பலன்களையும் அழிக்கும் என்பது திண்ணம்.



## காலை மாலை 2 நிமிடம் எனக்காக ஒதுக்குங்கள்

# பக்தர்களிடம் கேட்ட காஞ்சி பெரியவா

பெரியவாள் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

எதிரே, ஒரு பெரிய மரம். தடினமான குரங்கு ஒன்று வந்து மரத்தில் ஏறியது. பின், இருபது முப்பது குரங்குகள் அந்த லீடர் குரங்கை தொடர்ந்து மரத்தில் ஏறின.

பெரியவாள், ஒரு கூடை மாம்பழத்தை மரத்தடியில் போட சொன்னார்கள்.

லீடர் குரங்கு என்ன உத்தரவு எப்படி போட்டதோ தெரியவில்லை! ஆனால், மற்ற குரங்குகள் ஒவ்வொன்றாக வந்து பழத்தை எடுத்து கொண்டு மேலே சென்றன. லீடர் குரங்கு மட்டும் ஒரு பழத்தை கூட தொடவில்லை!

பெரியவாள் சொன்னார்கள்:

"குரங்குகள் போன்ற மிருகங்களுக்கு கூட ஒரு discipline இருக்கு! லீடர் குரங்கு சொல்கிறபடி நடக்கின்றன."

"காட்டில், யானைகளுக்கு ஒரு தலைமை யானை இருக்கும். அந்த லீடர் யானையை follow பண்ணித்தான் மற்ற யானைகள் செல்லும்."

"ஒரு கட்டெறும்பு செத்துபோனால், மற்ற கட்டெறும்புகள் அதை இழுத்துச் செல்லும்."

"ஒரு காக்கை இறந்து போனால், மற்ற காக்கைகள் மரத்தில் உட்கார்ந்துகொண்டு துக்கமாய் கதறும்."

"ஆனால், ஆறறிவு படைத்த மனிதர்கள் தான் குரு சொல்கிறபடி நடப்பதில்லை. என்னை பார்த்து, நீங்கெல்லாம் ஆசார்யாள். பெரியவாள் என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால், நான் சொல்வதை உங்களால் செய்ய முடிகிறதில்லை!"

கவனமாக கேட்டு கொண்டிருந்த பக்தர்கள், ஒரே குரலாக, "பெரியவா என்ன உத்தரவு போட்டாலும் செய்கிறோம்" என்று பக்தியோடு பதிலளித்தார்கள்.

"சரி,காலையில் இரண்டு நிமிஷம், சாயங்காலம் இரண்டு நிமிஷம், எனக்காக ஒதுக்குங்கள். இருபத்திநான்கு மணி நேரத்தில், நாலு நிமிஷம் தான் கேட்கிறேன்."

"காலையில், இரண்டு நிமிஷம் "ராம, ராம" என்று சொலுங்கோ; சாயங்காலம் இரண்டு நிமிஷம் "சிவ, சிவ"ன்னு சொலுங்கோ..."

"அப்படியே செய்கிறோம்" என்று சுமார் நூறு போர்கள் தெரிவித்து கொண்டார்கள்.





● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க

# aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்





















# பகுத்தறிவாளர்களுக்கு தண்ணீர் காட்டிய

# பரமஹம்ச யோகானந்தர்




பரமஹம்ச யோகானந்தா தன் உடலை விடும் பொழுது....!! அவர்முன் 700 பேர் இருந்தனர். அமெரிக்காவில், போஸ்டன் நகரில், அவர் மஹாசமாதி அடைந்தார். தான் உடலை விடும் முன்பே, 'நான் உடலை விடப்போகிறேன்' என்று அவர் அறிவித்திருந்ததால், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் என பலரும் அங்கே வந்து அமர்ந் திருந்தனர்.

வந்தவர்களுடன் சிறிது நேரம் பேசியிருந்து விட்டு, 'இப்போது என் உடலை நான் விடப்போகி றேன்'என்று சொல்லி, பத்மாசனத்தில் அமர்ந்து, தன் உடலை நீத்தார். மருத்துவர்கள் எத்தனை சோதனை செய்தாலும் அவர்களுக்கு புலப்படாத ஒரு விஷயமிது. ஏனெனில், மருத்துவ அறிவிய லைப் பொருத்தவரை, உடலில் ஏதேனும் சிதைவு ஏற்பட்டு, உடல் இயங்க முடியாத நிலையில் மட்டுமே உயிர் பிரியும் என்று நம்பப்படுகிறது. இதயமோ, நுரையீரலோ, வேறு ஏதோ ஒன்று கெட்டுப்போனால் உயிர் நீங்கும் என்பது அவர் களது நம்பிக்கை. நன்றாக, ஆரோக்கியமாக இருக்கும் ஒருவர், 'இப்போது நான் போகப்போகி றேன்' என்று சொல்லிவிட்டு, தன் உடல் நீப்பதை அவர்கள் எங்கும் பார்த்திருக்கவில்லை.

அதுமட்டுமில்லை, பரமஹம்ச யோகானந்தா உடலை விடும்போது, '33 நாட்களுக்கு பிறகுதான் இவ்வுடல் அடக்கம் செய்ய வேண்டும் அழிந்து போகாத இவ்வுடலை அப்படியே வைத்துக் கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டு உடலை நீத்தார்.



அழகுராஜா

உடலில் தேவையான அளவிற்கு 'வியானப் பிராணா'வை அவர் தக்கவைத்துச் சென்றதால்... அத்தனை நாட்களுக்கு உடல் நன்றாக இருக்கும். இதைச் செய்வதற்கு அவருக்கு எவ்வித அவசிய மும் இல்லை. ஆனால், அவர் உயிரோடு இருக்கும் போது, ஒருசில முட்டாள் கூட்டம் பகுத்தறிவு என்ற போர்வையில் பரமஹம்ச யோகானந்தருக்கு அதிகளவில் தொல்லைகள் தந்தனர்.

அதனால் போகும்போது, அவர் களுக்கு கொஞ்சம் விளையாட்டுக் காட்டிவிட்டுச் செல்லலாம் என்று அவர் முடிவு செய்தார். காரண அறி வை மட்டுமே பயன்படுத்தி அவரைப் பற்றி இல்லாததை எல்லாம் பேசிய விஞ்ஞானிகளுக்கு, புரியவைத்துப் போகலாம் என்றெண்ணி, 30

நாட்கள் உடல் அப்படியே இருக்கும், அனைத்து சோதனைகளையும் நன்றாக செய்யுங்கள் என்று சொல்லி, உடலை விட்டுப் போனார் அவர்.

அவர் உடல் (U.S.A) லாஸ் ஏஞ்சல்ஸில், இன்றும் அழியாமல் அப்படியே இருக்கிறது.

இவரது குரு யுக்தேஸ்வரகிரியும் இவரை போலவே தன் உயிரை துறக்க போவதை முன் கூட்டியே அறிவித்தார் மேலும் அவர் இறந்த மறுநாளே பரமஹம்ஸ யோகானந்தருக்கு தன் உடலோடு காட்சி கொடுத்தார்.

ஒவ்வொரு யோகியும் தன் உடம்பை கை விடும் நிலை தனித்துவமானது. மகா சமாதி என்றழைகப்படும்.

கபீர் மறைந்த இடத்தில வெறும் ரோஜா பூக்களே இருந்தன.

ரமணர் மறைந்த பொழுது ஒரு ஒளி தோன்றி திருவண்ணமலையில் மறைந்தது.

பிரம்பு கூடைக்குள் புகுந்து கடற்கரையோர சிறுவர்களுக்கு விளையாட்டு காட்டிய பட்டினத்தார் அந்த கூடைக்குள்ளிருந்தே மறைந்து போனார். அடையாளம் அழித்து பூரணமான அவரின் அடையாளமாக, அவர் இருந்த இடத்தில ஒரு சிவ லிங்கம் இருந்தது.

உண்மையான ஒரு யோகி தன் மரணத்தை மகா சமாதி நிலைக்கு கொண்டு செல்லமுடியும் என்பதற்கு மேற்கண்டவர்களே சாட்சி.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# வில்வமரத்தை வீட்டில் வளர்ப்பதால் ஏற்படும் பலன்கள்

நாம் வீட்டில் வில்வமரம் நட்டு வளர்ப்பதினால் பின்வரும் பல்வேறு நன்மைகள் அடைய முடியும் என சிவபுராணம் சொல்கிறது....

வில்வ மரத்தை நட்டு பராமரிப்பதனால் ஏற்படும் பலன்கள்

- அஸ்வமேதயாகம் செய்த பலன் ஏற்படும்.
- ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும்.
- கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும்.
- 108 சிவாலயங்களை வலம் வந்து தரிசித்த பலாபலன் உண்டாகும்.
- இம் மரத்தின் காற்றை நுகர்ந்தாலோ அல்லது அதன் நிழல் எமது சரீரத்தில் பட்டாலோ அதீத சக்தி கிடைக்கும்.
- சிவனிற்கு பிரியமான வில்வார்ச்சினை மூலம் சிவனின் திருவருட் கடாச்சத்தைப் பெறமுடியும்.
- வில்வமரத்தை முறைப்படி விரதமிருந்து பூஜிப்பவர்க்கு அனைத்து நன்மைகளும் உண்டாகும்.
- வீட்டில் துளசி மாடம் போல் வில்வமரம் வைத்து வளர்ப்பவரிற்கு ஒருபோதும் நரகமில்லை.
- ஒரு வில்வதளம் கொண்டு இறைவனை அர்ச்சிப்பது இலட்சம் ஸ்வர்ணபுஸ்வங்களால் இறைவனை அர்ச்சிப்பதற்கு சமன்.
- வில்வம் பழத்தின் சதையை நீக்கி அதனை உலர்த்திக் குடுவை யாக்கி அதில் விபூதியை வைத்துப் பயன் படுத்தினால் அந்த திருநீற்றுக்கு அதீத சக்தி ஏற்படும்.



www.aanmeegamalar.com

# வேப்பம் கசக்கிறது, மாமர கனி இனிக்கிறது பலவித மனிதர்கள் காரணம் என்ன?

வில்வம், துளசி போன்ற இலைகள் மிகவும் போற்றப்படுகிறது ஆனால் மற்ற இலைகள் இவ்வாறு போற்றப்படுவதில்லை, ஒரு இலை மற்றொன்றை விட புனிதமாக இருக்கிறது? இது ஒருவித பாரபட்சமா?

இந்த கேள்வி அனைவர் மத்தியிலும் எழும்.

அப்படி பார்த்தால், எல்லாமே மண்ணிலிருந்து தான் வருகிறது. வேப்பம் பழமும், மாம்பழமும் ஒரே மண்ணிலிருந்து வந்தாலும், சுவை வெவ்வேறாக இருக்கிறது அல்லவா?

அதுபோன்றுதான் ஒரே மண் ஆனால் அந்த அந்த செடிகள், மரங்கள் அந்த மண்ணில் உள்ள சத்துக்களை அவை வகைப்படுத்தி எடுத்துக்கொண்டு வளரும் விதத்தில் அவை மாறுபடுகின்றன.

ஒரு குறிப்பிட்ட உயிர், ஒரு மண்ணை கையாளும் வழிமுறையும், இன்னொரு உயிர் அதே மண்ணை கையாளும் வழிமுறையும் வெவ்வேறாக இருப்பதால் வேப்பமரம் கசப்புத் தன்மையும், மாமரத்து கனி இனிப்பு சுவையுடன் உள்ளது.

அதுபோன்றுதான் பூமியும், ஒரே பூமியில் தோன்றும் மனிதர்கள் தங்களுக்குள் கிரகிக்கும் விஷய ஞானத்தாலும், அனுபவத்தாலும் மட்டுமே மாறுபடுகின்றனர்.

மேற்கண்டவற்றால் மனிதர்களாக தோன்றுபவர்கள், நல்லவர், கெட்டவர், சித்தர்கள், மகான்கள், ஞானிகள் என்று தங்களை பல்வேறு விதத்தில் இந்த பூமியில் கிரகிக்கும் தன்மைக்கேற்ப மாறுபடுகின்றனர். பூமி ஒன்று தான், ஆனால் நாம் அவற்றிலிருந்து புரிந்து கொள்வது வேறுபடுகிறது.



ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள்.

aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# தீராத துயரத்தில் தவிக்கிறீர்களா?

# குலதெய்வ வழிபாடும் பித்ரு வழிபாடும் தீர்வு தரும்

உலகத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பல்வேறு விதங்களில் பல்வேறு விதமான சிரமங்கள் பட்டுக் கொண்டு இருப்பதற்கு காரணம் "இரண்டு விதமான காரியங்களை அடிக்கடி செய்யாமல் இருப்பதுதான்" என்று நம்முடைய முன்னோர்களாகிய சித்தர்கள் உபதேசம் செய்து உள்ளார்கள் .

ஒவ்வொரு மாதமும் அமாவாசை திதி அல்லது வளர்பிறை பஞ்சமி திதி அன்று குலதெய்வம் கோயிலுக்கு சென்று குல தெய்வத்திற்கு படையலிட்டு 90 நிமிடங்கள் வரை மனப்பூர்வமாக வேண்டிக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு மற்றவர்கள் வீட்டுக்குச் செல்லக் கூடாது; வேறு கோயில்களுக்கும் செல்லக் கூடாது;

நேராக அவரவர் வீட்டுக்குச் செல்ல வேண்டும்!!!

இப்படி ஒவ்வொரு மாதமும் குலதெய்வம் கோயிலுக்கு சென்று வருவதன் மூலமாக எல்லாவிதமான கஷ்டங்களும் கவலைகளும் துயரங்களும் படிப்படியாக நீங்கி வளமான வாழ்க்கையை குலதெய்வத்தின் அருளால் கிடைத்துவிடும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம்முடைய ஆன்மீக பாரத நாட்டில் தினமும் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வந்தார்கள்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை மாதம் ஒருமுறை அமாவாசை நாள் அன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வந்தார்கள்.

தற்போது வருடத்திற்கு ஒரு முறை கூட முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது கிடையாது.

அதனால் தான் நாம் பல்வேறு விதங்களில் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறோம்.

பல்வேறுவிதமான சித்தர்களும் ரிஷிகளும் கலியுக மக்களுக்காக பல யுகங்கள் தவம் இருந்து ஈசனிடம் ஒரு வரம் பெற்று உள்ளார்கள்

அது என்னவென்றால் " ஒவ்வொரு வருடமும் தை மாதம் முதல் நாளன்று யார் அன்னதானம் செய்தாலும் அது பித்ரு தர்ப்பணம் செய்ததற்கு சமமான புண்ணியத்தை அவர்களுக்கு கிடைக்க வேண்டும்" என்பதே அந்த வரம் ஆகும்

இந்த வருடம் தை மாதம் முதல் நாளன்று நாம் நம்முடைய ஊரில் உள்ள பழமையான கோயில் வாசலில் அன்னதானம் செய்வோம் !!!

பித்ருக்கள் ஆசீர்வாதத்தை பெருவோம்!!!

நன்றி : ஸ்ரீ அகஸ்திய விஜயம்



www.aanmeegamalar.com




# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

பொதுவாக நம் மனதின் சுபாவம் என்ன என்பது பற்றி நாம் அறிந்து கொண்டால் மனம் அமைதி அடைந்து விடும். மனதின் சுபாவம் என்ன என்பதை எப்படி அறிந்து கொள்வது என்று சிந்தித்துப் பார்த்தால், அதற்கு தியானம், ஜபம், பாராயணம் போன்றவைகள் ஆன்மிகம் வழிகாட்டுகிறது. நாம் மனதின் சுபாவங்களைப் புரிந்து கொள்ளாமல் இருந்தால், ஒருபோதும் நம் கண்ணுக்குத் தெரியாத மனதைக் கட்டுப்படுத்துவதற்கு முடியாது. ஒரு யானை நம் முன்னால் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம்.. அதன் குணத்தை தெளிவாக அறிய வேண்டுமெனில் அதன் செயல்களை தொடர்ந்து கவனித்துக் கொண்டே வரவேண்டும். அப்போது அதனுடைய பலம், பலவீனம் எது என்பதை அதன்போக்கில் சென்று அதன் சுபாவத்தை அறிந்து கொள்ளலாம். அதன் பிறகு அந்த யானையை நாம் எளிதாக கட்டுப்படுத்தி பிடித்து விடலாம்

நமது மனம் எண்ணுவதை மட்டும் தொடர்ந்து கவனித்துக் கொண்டே வர வேண்டும். அதனுடைய பலம், பலவீனம் எது என்பதை தொடர்ந்து கவனித்துக் கொண்டே வரும்போது மனதின் சுபாவத்தினை எளிதில் அறிந்து கொள்வதற்கு முடியும். அவ்வாறு மனதின் சுபாவங்களை அறிந்து விட்டால், நம் மனதை நாம் கவனித்துக்கொண்டு இருக்கிறோம் என்று நம் ஆழ்மனம் எண்ணி விடும். அதனால் நம் மனம் தானாகவே நம்மையும் அறியாமல் கட்டுப்பட்டு மனம் அமைதி அடைந்து விடும் என்பதை நாம் நாளடைவில் அறிந்து கொள்ளலாம்.

அதாவது நம் மனம் நம்மிடம் வசப்பட்டு விடும். மனதின் இயல்பினை அறிந்து கொள்வதற்கு ஆன்மீக வழியில் தியானம், ஜபம், தவம், பஜனை, சத்சங்கம் என ஆன்மிகம் பலவழிகளைக் காட்டுகிறது. நமது மனம் இப்போது என்ன எண்ணிக்கொண்டு இருக்கிறது அது எங்கு செல்வதற்கு நினைக்கிறது என்று மனதை தொடர்ந்து நாம் கவனித்து கொண்டே வரவேண்டும். அவ்வாறு நாம் மனதைக் கவனித்துக் கொண்டு இருக்கிறோம் என்று நம் மனம் அறிந்து கொண்டாலே ஆழ்மனம் தானாகவே அமைதி அடைந்து விடும். இதற்கு ஆன்மிகம் பலவழிகளில் பெரிதும் துணை புரிகிறது.

எடுத்துக்காட்டாக பெற்றோர்கள் தங்கள் மகனையோ, மகளையோ அவர்கள் அறியாமல் அவர்களது செயல்பாடுகளை நடவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு கவனிக்க ஆரம்பித்தாலே, பெற்றோர்கள் தங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதை பிள்ளைகள் நாளடைவில் உணர்ந்து கொள்வார்கள். அவ்வாறு உணரும்போது அவர்கள் தவறான வழியில் செல்வதற்கு நினைக்கக்கூட மாட்டார்கள். மேலும் அவர்கள் தங்களையும் அறியாமல் பழக்கவழக்கங்களில் நல்ல வழிகளையே பின்பற்ற ஆரம்பித்து விடுவார்கள். நல்ல நண்பர்களிடம் மட்டும் நட்பு வைத்துக்கொள்வார்கள். மேலும் அவர்கள் ஒருபோதும் தங்கள் நல்ல பழக்கவழக்கங்களை விட்டுவிட மாட்டார்கள்.

அதுபோல்தான் நமது மனமும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் நல்ல செயல்பாடுகளில் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலே அவர்களுடைய பிள்ளைகளும் நல்ல பண்புகளுடன் வளர்வார்கள் என்பதை உறுதியாக நம்பலாம். எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கவனித்து வருவதுபோல் நமது மனதை தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே வரவேண்டும். நாம் பொதுவாக மனதிடம் எப்போதும் சவால் விடக்கூடாது. அவ்வாறு சவால் விட்டால் நமது மனதைக் கட்டுப்படுத்துவதற்கு இயலாது.

எடுத்துக்காட்டாக குரு சீடனிடம் ‘தியானம் செய்யும்போது நீ குரங்கை பற்றி நினைக்கக்கூடாது’ என்று கூறிவிட்டார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது சீடன் தன்னோட மனதிடம் குரு கூறியபடி ’தியானம் செய்யும்போது குரங்கை மட்டும் நினைக்காதே’ என்று தன் மனதில் தன்னை அறியாமல் பதிவு செய்து விடுகிறான். அதனால் அந்த சீடன் தியானம் செய்வதற்கு அமரும்போதெல்லாம் குரு அவனிடம் கூறிய குரங்குதான் அவனுக்கு நினைவுக்கு வருகிறது. பொதுவாக மனமானது தியானம் செய்வதற்கு ஆரம்பிக்கும்போது முதலில் எதை நினைக்கக்கூடாது என்று மனதிடம் நாம் முதலில் பதிவு செய்திருந்தமோ அதனைத்தான் மனம் இயல்பாக நினைவில்

27

வைத்துகொள்ளும்.

நம் மனதிற்கு எதிர்மறையாக சென்று அதனை நாம் வெற்றி பெறுவதற்கு முடியாது. எனவே மனம் செல்லும் போக்கில் சென்று நேர்மறை சிந்தனைக்கு நமது மனதை மாற்றிதான் வெற்றி காண முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். குரு சீடனிடம் தியானம் செய்யும்போது 'குரங்குக்கு பதில் நமச்சிவாய' என்பதை மட்டும் நினைத்ததுக் கொண்டு இரு என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்போது மனம் என்ன நினைக்குமென்றால் சீடன் தன்னை ஏமாற்றுகிறான் என்று நினைத்துக்கொள்ளும். சீடனின் மனம் முதலில் அவன் பதிவு செய்த குரங்கை பற்றிதான் மனம் நினைக்கும். இந்த மனம் என்ன நினைக்கும் என்றால் மனதை நாம் ஏமாற்றுகிறோம் என்று மனம் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு விடுமாம். இந்த மனம் இருக்கிறதே அது ஒரு சூட்சுமமான நமது கண்ணுக்குத் தெரியாத புரியாத புதிர் ஆகும்.

மனதை வெறுக்காமல் எதிர்மறையாகச் சென்று விடாமல் அதனிடம் சவால் விடாமல் அதன் போக்கிலே சென்று அந்த மனதை நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இதில் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். நம் மனம் இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறது. என்ன செய்வதற்கு காத்துக்கொண்டிருக்கிறது என்பதை மனதை எப்போதும் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வாறு மனதை கவனித்துக்கொண்டு நாம் செயல்பட்டாலே, மனமானது நம்மை கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள் என எண்ணிகொண்டு அதன் போக்கிலிருந்து விலகி மனம் எளிதில் நம் வசப்பட்டு விடும்.

எடுத்தக்காட்டாக நாம் உள்ளே வெளியே விடும் மூச்சுக்காற்றை எடுத்துக் கொள்வோம். நாம் தியானம் செய்யும்போது நாம் உள்ளே வெளியே விடும் மூச்சுக்காற்றை நாம் தொடர்ந்து கவனித்தாலே, மனம் வேறு சிந்தனைக்கு செல்லாமல் அதனை உள்வாங்கிக்கொண்டு மனது அமைதியாகி விடும். இது மனம் அமைதி அடைவதற்குரிய எளிமையான தியான வழிமுறையாகும்.

மனக்கட்டுப்பாடு, இந்திரியக்கட்டுபாடு இவற்றையெல்லாம் சாதனைகள் மூலம் அடைந்து விட்டோம் என்று எண்ணிக்கொண்டு, ஆன்மீக சாதனைகளை செய்வதை நாம் விட்டு விடக்கூடாது. ஆன்மீக சாதனைகளை தொடர்ந்து தவறாமல் செய்து கொண்டிருக்க வேண்டும். அதற்கு நாம் தவறாமல் சத்சங்கங்களை நாடவேண்டும். சத்சங்கம் நாள்தோறும் செல்லும்போது ஆன்மீக அன்பர்களின் அனுபவங்களைக் கேட்டு அறிந்து கொள்வதற்கு முடியும்.

சத்சங்கம் ஆன்மீக வழியில் நின்று நமக்கு வழிகாட்டியாக இருந்து நாம் மனம் தளராமல் இருப்பதற்கும் மனக்கட்டுபாடுடன் இருப்பதற்கும் பெரிதும் உதவி செய்யும்.

மனக்கட்டுப்பாடு, இந்திரியக்கட்டுப்பாடு, தியானம், பாராயணம், வழிபாடுகள் போன்றவற்றை தொடர்ந்து நாம் கடைபிடிப்பதற்கும், மனம் அமைதியுடன் இருப்பதற்கும் பெரிதும் சத்சங்கம் உதவுகிறது. நமது மனம் ஒரு நிலையில்லாமல் கடல் அலைகள்போல் ஏன் அலைபாய்கிறது? அதனை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது குறித்து சத்சங்கத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். மேலும் அவரவருக்குத் தகுந்தவாறு ஆன்மீக முன்னேற்றத்திற்குரிய வழிமுறைகளை எடுத்துக் கூறுவார்கள். நாம் கோவிலுக்கு செல்லும்போது மனதிற்கு அமைதி கிடைப்பதுபோல் சத்சங்கத்தில் நாம் கலந்து கொள்வதால் நம்மையும் அறியாமல் ஒருவிதமான மன அமைதி அங்கு கிடைக்கும். சத்சங்கம் ஆன்மீக வழியில் நம்மையும் நம்மைச்சுற்றி இருப்பவர்களையும் நல்ல பண்புகளுடன் நடத்திச் செல்லும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை.




உலக விசயங்களில் கவனம் செலுத்துபவர்கள் மற்றும் வசதி படைத்தவர்கள் எல்லாம் தங்களுக்கு பொழுதுபோகவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டு இருப்பார்கள். அவர்கள்

‘எனக்கு விடிந்தால் பொழுதே போகவே மாட்டேன்கிறது என்ன செய்வது என்று தெரியவில்லை’ பெருமையுடன் கூறிக்கொண்டு இருப்பார்கள். ஆனால் ஆன்மீகத்தில் ஈடுபட்டு மன அமைதி தேட நினைக்கும் ஆன்மீக அன்பர்கள் நேரம் காலம் பொழுது தங்களுக்கு போதுமானதாக இல்லையே என்றுதான் கூறுவார்கள்.

தியானம், ஜபம், பாராயணம் கலந்துரையாடல், வழிபாடுகள் போன்றவற்றில் ஆன்மீக அன்பர்கள் ஈடுபடுவதால் நேரம் காலம் தங்களை கடந்துபோவதுகூட அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆன்மீக அன்பர்கள் நேரம் காலம் போதுமானதாக இல்லையென்றுதான் தங்களுக்குள் கூறிக்கொள்வார்கள். ஆன்மீகச்சாதனைகள் மூலம் கண் காது நாசி வாய், மெய் போன்ற இந்திரியக் கட்டுப்பாடுகளில் ஓரளவுக்கு மனக்கட்டுப்பாடுகளை கொண்டு வந்தவர்கள், அவற்றைத் தொடர்ந்து கடைபிடிப்பதற்கு இந்தக் காலம் நேரம் என்பது போதுமானதாக இருப்பதில்லை.

நாம் ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் வாழ்வின் தொடக்கத்தில் நாம் எவ்வளவு காலத்தை வீணாக்கி இருக்கிறோம் என்பது புரிந்து கொள்ள முடியும். காலம் பொன் போன்றது என்று கூறுவார்கள். நாம் பொன் பொருள்களை இழந்து விட்டால் மீண்டும் பெற்று விடலாம். ஆனால் காலம் நேரத்தை இழந்து விட்டால் அதனை மீண்டும் பெறமுடியுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கையில் போதியளவு காலம் இருந்தால்தான் உடல், உள்ளம் மகிழ்ந்து ஆரோக்கியத்துடன் நற்பண்புகளை கடைப்பிடித்து வாழ முடியும்.

நமது கடமைகளை மட்டும் செய்தல் வேண்டும். மற்றவர்கள் கடமைகள் செயல்களில் குறுக்கிடாமல் இருத்தல் வேண்டும். தேவையற்ற உலக விசயங்களில் கவனம் செலுத்தாமல் இருந்தாலே நாம் மன அமைதியினை ஓரளவு பெறுவதற்கு முடியும். சினிமா, தொலைக்காட்சி, கிரிக்கெட், கேளிக்கை விழாக்கள் போன்றவைகளை பார்க்கக் கூடாது. அவற்றை நாம் பார்த்து கேட்டு அனுபவவிப்பதன் மூலம் நாம் ஓரளவு தற்காலிகமாக மகிழ்ச்சி அடையலாம். இவைகளைப் பார்ப்பதால் மன அமைதி என்பது கிடைக்கிறதா என்று சிந்தித்துப் பார்த்தால் ‘இல்லை’ என்றுதான் கூறவேண்டும். அதனால் எந்தப்பயனும் பலனும் இல்லை



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் சினிமா, தொலைக்காட்சி போன்றவற்றை நாம் தொடர்ந்து பார்க்கும்போது நமது மனமும் கண், காதுகள் போன்ற ஐம்புலன்களும் பாதிக்கப்படுகிறது. குறிப்பாக மனம் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக தொலைக்காட்சி பார்க்கிறோம் என்று வைத்துக் கொள்வோம் தொலைக்காட்சியை தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருந்தால் கண்கள் கெட்டுப் போய்விடும் என்று மட்டும் பெரியவர்கள் கூறுவார்கள். அதிகமாக தொலைகாட்சி பார்க்காதே என்று மட்டும் அவர்கள் அறிவுரை கூறுவார்கள். ஆனால் தொலைக்காட்சியை பார்ப்பதால் கண்கள் மட்டுமல்ல நம் கண்ணுக்குத் தெரியாத நமது மனமும் அதனால் பாதிக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தொலைக்காட்சி நமது கண்கள் வழியே பார்க்கும் காட்சிகளும், காதுகள் வழியே கேட்கும் கருத்துக்களும் நமது மனதை ஆக்கிரமித்து முற்றிலும் பாதிக்கிறது என்பதை யாரும் உணர்வதில்லை. இதனை நமது அனுபவத்தின் மூலமாகவும் ஆன்மீக வழியில் சிந்திப்பது மூலம் தெரிந்து கொள்ளலாம்.

நமது வாழ்வில் சகித்துக்கொள்ளுதல், பொறுத்துக்கொள்ளுதல் பொறுமையுடன் இருத்தல், ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நல்ல பண்புகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். நாம் எவற்றை சகித்துக் கொள்ளுதல், பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும் என்றால் நமக்கு ஏற்படக்கூடிய இயற்கையான வெப்பம் குளிர், போன்றவற்றை பொறுத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் உலகில் மனிதர்களுக்குள் ஏற்படக்கூடிய சுகம், துக்கம், மானம், அவமானம், இன்பம், துன்பம், புகழ், இகழ் போன்றவற்றை சகித்துக் கொள்ளுதல் வேண்டும்.

நாம் ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் இந்த உலகமே நேர்மறை, எதிர்மறை என்ற இரண்டு தன்மைகளுடன்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதாவது நேர்மறை எண்ணங்கள், செயல்பாடுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள், செயல்பாடுகள் வழியே இயங்கிக் கொண்டிருக்கிறது. அவைகள் மன்னித்தல் பழிவாங்குதல், துன்பம் இன்பம், இரவு பகல் , குளிர் வெப்பம், நன்மை – தீமை, தெளிவு –குழப்பம், அமைதி – ஆரவாரம்

கோபம் சாந்தம்      இப்படி ஒவ்வொன்றாகக் கூறிக்கொண்டே செல்லலாம்.

நமக்கு திடீரென்று பணம், புகழ், பதவி போன்ற இன்ப நிகழ்வுகள் வந்து விட்டது என்று உலகில் தலைகால் தெரியாமல் வரம்புமீறி நடந்து கொள்ளக்கூடாது. அதேபோல் பணக்கஷ்டம் மனக்கஷ்டம் மற்ற துன்பங்கள், துயரங்கள் போன்றவை வந்து விட்டால் இடிந்துபோய் சோகத்துடன் பேசாமல் உட்கார்ந்து விடக்கூடாது. இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு மனதை சமநிலைக்குக் கொண்டு வருவதற்குப் பழக வேண்டும். நமக்கு இன்பம் வரும்போது மகிழ்ச்சி கொள்கிறோம். நமக்கு துன்பங்கள் வரும்போது துயரத்தில் மூழ்கி விடுகிறோம்.

மனிதன் தனக்கு வரக்கூடிய இன்பத்தை ஏற்றுக்கொள்வதுபோல் துன்பத்தையும் மனம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது. உலகில் இன்பம் துன்பம் இரண்டும் நிரந்தரம் அல்ல. ஆன்மீக வழியில் செல்லும் பிறவா நிலைப் பேரின்பம் மட்டும் நிரந்தரம் ஆகும். இன்பமோ துன்பமோ மனதை சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று இதிகாசங்கள், புராணங்கள் வலியுறுத்திக் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் ஒரு காட்சி. அயோத்தியை ஆண்ட மன்னன் தசரதசக்கரவர்த்தி குலகுரு வசிஷ்டரிடம் கலந்து பேசி இராமபிரானுக்கு அயோத்தி மன்னனாக முடி சூட்டுவதற்கு முடிவு செய்கிறான். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கேற்ப தந்தையின் வாக்குக்கு இணங்க அயோத்தி மன்னனாக முடி சூட்டுவதற்கு இராமபிரான் சம்மதம் தெரிவிக்கிறார். மறுநாள் இராமபிரானுக்கு முடிசூட்டு விழா ஏற்பாடுகள் அயோத்தியில் மங்கள வாத்தியங்கள் முழங்க கோலாகலமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

இந்நிலையில் மந்தரையின் குறுக்கீட்டால் கைகேயி இராமபிரானிடம் "கடல் சூழ்ந்த உலகத்தை பரதன் ஆள்வான். நீ சடைகள் தாங்கித் தவமேற்கொண்டு காடுகளில் திரிந்து நதிகளில் நீராடி, ஏழிரண்டு ஆண்டுகளில் திரும்பி வரவேண்டும் என்பது மன்னன் ஆணை" என்றாள் கைகேயி. இதனைக் கேட்ட இராமபிரான் வியப்போ திகைப்போ துன்பமோ மனத்துயரமோ அவனைத் தாக்கவில்லை. அதிர்ச்சிகள் அவனை அணுகவில்லை. தாமரை மலரை போன்ற அவன் முகப்பொலிவு முன்னிலும் அதிகம் மலர்ச்சி அடைந்தது என்று கம்பர் இராமாயண காவியத்தில் இராமனுடைய மனநிலை பற்றி விவரிக்கிறார்.

இராமபிரான் அயோத்தி மன்னனாக முடி சூடப் போகிறோம் என்று மகிழ்ச்சியும் அடையவில்லை. அதேபோல் கைகேயின் கூற்றுப்படி காடு செல்வதைப்பற்றி அவன் வருத்தப்படவும் இல்லை. வாழ்வில் இன்பமோ துன்பமோ வரப்பெற்றால் மனதை இராமபிரான்போல் சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று இராமாயணம் என்னும் இதிகாசம் நம் மன அமைதிக்கு சிறந்த வழி காட்டுகிறது.

நாம் வாரம் ஒருமுறையோ முடிந்தால் நாள்தோறும் சத்சங்கத்தில்  தவறாமல் கலந்துகொண்டு வரும்போது ஆன்மீக அன்பர்கள் மூலம் ஓரளவு மன அமைதி கிடைக்கும். அவ்வாறு ஆன்மீகவழியில் நமக்குக் கிடைத்த அனுபவங்களின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். நமது வாழ்வில் துன்பம்இன்பம், புகழ்இகழ் பகல்இரவு வெப்பம்குளிர் தர்மம் அதர்மம்  போன்ற இருவேறுபட்ட உணர்வுகள் வரக்கூடும். அவற்றை நாம் ஆன்மீக வழியில் சிந்தித்து செயல்பட்டு அதனை சகித்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒருவனுக்குத் தீராத வயிற்று வலி என்று வைத்துக் கொள்வோம். அவன் மருத்துவரிடம் செல்கிறான். மருத்துவர் அவனை நன்கு பரிசோதித்து பார்த்து விட்டு மருந்து கொடுத்து வயிற்றுவலி குறைவதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும் என்று கூறிவிட்டார். அந்த மருத்துவர் கூறியபடி அவன் இரண்டு மணி நேரம் வரை தன்னோட வயிற்றுவலியின் துன்பத்தைப் பொறுத்து சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

பாவ புண்ணியம் சமநிலையில் இருந்தால்தான் இந்த மனித ஜென்மம் கிடைக்கும். அதனால்தான் அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனினும் கூன் குருடு நீக்கிப் பிறத்தல் அரிது என்று ஔவை மூதாட்டி மனித ஜென்மத்தை உயர்த்திப் பாடியுள்ளார். யாராக இருந்தாலும் பாவம் புண்ணியங்களுக்குத் தகுந்தவாறு இன்பம் துன்பத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

இதற்கு எந்தவிதமான மாற்று வழிகள் எதுவும் ஒருவனுக்கு இல்லை. புகழ் பணம் சொத்துக்கள் பதவிகள் இருந்தாலும் செய்த பாவங்களுக்குத் தக்க அவன் துயரத்தை அடைந்தே தீர வேண்டும். எனக்கு கோடிகோடியாகப் பணம் சொத்துக்கள் இருக்கிறது எனக்கு வந்த துன்பங்களையெல்லாம் என்னை நெருங்க விடமாட்டேன் என்று அதனிடம் சவால் விட



முடியாது. அதிலிருந்து தப்பிக்க முடியாது என்று சாஸ்திரங்கள் கூறுகிறது. ஆனால் இறைவனிடம் மனம் உருகி முறையிடும்போது துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் மனோசக்தி அவனுக்குக் கிடைக்கும் என்று இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை கூறுகின்றன.

இதனை ஒவ்வொரு மனிதனும் மனதில் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு மனதில் பதிந்து வைத்துக்கொண்டு இருந்தால் வரபெற்ற வரக்கூடிய துன்பங்களைக் கண்டு மனிதன் வீணாகக் கவலைப்பட்டுக்கொண்டு இருக்க மாட்டான். மேலும் சொத்துக்கள் பணம் இருக்கிறது என்று கர்வத்துடன் செயல்பட நினைக்க மாட்டான். இதனை மனதில் நன்கு பதிய வைத்துக்கொண்டால் தனக்கு வரபெற்ற துன்பங்களை நினைத்து மனிதன் மனம் கலங்காமல் எதனையும் இயல்பாக ஏற்றுக்கொள்வான். சூழ்நிலையின் காரணமாக மற்றவர்கள் நமக்கு செய்த துன்பங்களை மறந்து சகிப்புத்தன்மையுடன் பொறுத்துக் கொள்ளவேண்டும். இது போன்ற அனுபவங்களை மனிதன் பெறும்போது அவனுடைய மனம் அவனை அறியாமல் பக்குவமடைந்து மனம் தானாகவே அமைதி அடைந்து விடும்.

சிலர் பணம் பதவி சொத்துக்கள் வைத்துக்கொண்டு சுயநலமாக நல்ல சொகுசான வாழ்க்கையை இன்பத்தை நன்கு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே என்று நினைக்கலாம். நமக்கு வெளித்தோற்றத்தில் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதுபோல் நமக்குத் தோன்றும். அப்படிப்பட்டவர்களை நீங்கள் அணுகிப் பார்த்தால் அவர்கள் இரவில் தூக்கம் வராமல் ஏதாவது ஒன்றைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ஏன் அவர்கள் கவலைப்படுகிறார்கள் என்றால் ஒன்று தங்களிடமுள்ள பணம் சொத்துக்கள் போன்றவைகள் எதுவும் குறைந்து விடக்கூடாது.

மற்றொன்று பணம் சொத்துக்கள் எல்லாம் திருடர்களால் கொள்ளையடித்துப் போகாமல் பாதுகாக்க வேண்டுமே என்று அல்லும்பகலும் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு உலக இன்பங்களை சுகங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறானோ, அதே அளவிற்கு துன்பங்களையும் அறிந்தோ அறியாமலோ அனுபவிப்பார்கள். இதனை சாஸ்திரங்கள், புராணங்கள் இதிகாசங்கள் கதைகள் மூலம் விளக்கி கூறுகிறது. இதனை ஒவ்வொரு மனிதனும் சிந்தித்து செயல்புரியும்போது இன்ப துன்பங்களைப்பற்றி கவலைப்படமாட்டான். அதனால் அவன் தேடும் விரும்பும் மனஅமைதி கிடைக்கும்.

மனிதன் வாழ்க்கையில் வெற்றி தோல்வியை சந்தித்துத் தீர வேண்டும். அவன் வெற்றியிலும் தோல்வியிலும் மனநிலையில் சமமாக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு மனதை பக்குவபடுத்துவதற்கு ஆன்மிகம் வழி காட்டுவதோடு மனதை அமைதி அடையும்படி செய்கிறது. சில மனித உறவுகள் துக்கத்தில் ஆரம்பித்து மகிழ்ச்சியில் முடியும். சில உறவுகள் மகிழ்ச்சியில் ஆரம்பித்து துயரத்தில் முடியும். இப்படி உலகில் எல்லாமே நேர்மறை எதிர்மறைகளாக இருக்கும்போது மனதளவில் சகிப்புத்தன்மை வரவேண்டும். துன்பங்கள் அடுத்தடுத்து வந்தால் அவற்றை நீ உனக்கு ஒரு பாடம், சோதனை என்று நினைத்து மனதை பக்குவநிலைக்குக் கொண்டு வரவேண்டும்.

அதேபோல் உனக்கு எதிர்பாராத பதவியோ பணமோ புகழோ வந்து விட்டால் மற்றவர்களுடன் இணைந்து கொண்டாடலாம். உனக்கு இன்பம் அளவுக்கு அதிகமாக வந்துவிட்டால் அடுத்து ஏதோ ஒரு துன்பம் உனக்கு காத்திருக்கிறது வரப்போகிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதனை உணர்ந்து இன்பத்தில் நீ தலைகால் தெரியாமல் ஆடக்கூடாது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என்று பேச்சு வழக்கில் இருப்பதை பார்க்கிறோம். ஆன்மீக வழியில் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாக எடுத்துக்கொள்ளும்போது மனம் பக்குவம் அடையும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி கிடைக்கும். .

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# மொபைலில் ஆன்மிகமலரை முழுவதும் படிக்க

## Google Play Store
## aanmeegamalar
டவுன்லோடு செய்து







நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை

Subscribe MONEY

## இதழ் முழுவதும் இலவசமாக படிக்கலாம்...

Google Play